விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


மலர் 26 ஐப்பசி 7 முஹறம் 27 இதழ் 251
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-10-84

## எம். ஜி. ஆர். உடல்நிலை

[சென்னை]

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் உடல்நிலையில் திருப்தியான முன்னேற்றம் காணப்படுகிறது. அவரது உடலில் உப்பின் அளவு குறைந்திருப்பதோடு, மூளை நரம்புகளின் இயக்கமும் நல்லநிலையில் இருக்கிறது'' என்று நேற்று இரவு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எச். வி. ஹண்டே விடுத்துள்ள மருத்துவ அறிக்கையில் தெரிவித்

[12ம் பக்கம் பார்க்க]




● கொழும்பு நகரைக்கலக்கிய குண்டுகள்!

# மர்ம மனிதரை தேடி

# நாடு பூராவும் வேட்டை!

## 5 மாதத்தில் 3-வது சம்பவம்

(கொழும்பு)

**கொழும்பு நகரை ஐந்து மாதங்களில் மூன்றுவது தடவையாக நேற்றுக் கலக்கிய குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து, இச் சம்பவங்களின் பின்னணியில் இயங்கும் மர்ம 'மனிதர்களை'த் தேடி ஆயுதப் படையினர் நாடுபூராவும் 'வலை'விரித்துள்ளனர்!**

குண்டுவெடிப்புச் சம்பவங்கள், நகரை காலை ஐந்து மணி முதல் பத்து மணிவரை அல்லோலகல்லோலப்படுத்தியபோதிலும்; பகல் பன்னிரண்டு மணிக்குப் பின்னர் நகர் வழமைக்குத் திரும்பியது. ஆனாலும் நேற்றிரவு நகர் சற்று சோபை இழந்தே காணப்பட்டது.

கொழும்பு நகர் குண்டு வெடிப்புச் சம்பவங்களைப் பொறுத்தவரை கடந்த ஜூன் மாதத்தில் ஹோட்டல் ஒபரோயில் குண்டு வெடித்து ஒரு பெண் பலியானார். இதனைத் தொடர்ந்து இம்மாதம் எட்டாம் திகதி கொழும்பு புளுமொண்டல் வீதியில் எண்ணெய்க் குழாய் அருகில் குண்டுகள்வெடித்தன. மூன்றுவது சம்பவம், நேற்று நகரின் பல இடங்களிலும் பரவலாக இடம்பெற்றுள்ளது!

முதலாவது குண்டு, நேற்றுக் காலை ஐந்து மணியளவில் கொட்டாஞ்சேனையில் கடற்கரை பொலிஸ் நிலையம் அருகில் வெடித்தது இச் சம்ப

(11ம் பக்கம் பார்க்க)

## 'இன்ரசிற்றி'யில் பலத்த சோதனை: சந்தேகத்தின்மீது சிலர் கைது

(நமது அலுவலக, வவனியா நிருபர்கள்)

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த 'இன்ரசிற்றி' ரயில் அநுராதபுரத்திலும் வவனியாவிலும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதனால் சுமார் இரண்டு மணிநேரம் தாமதமாக யாழ்ப்பாணம் வந்தது

(11ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் மீண்டும் கடும் சோதனை

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவில் நேற்று இராணுவத்தினரும் பொலிசாரும் பலத்த சோதனையில் ஈடுபட்டனர். இப்பகுதிகளில் பாது

(12-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ரூ. 11,000 கொள்ளை!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஆசிரியர்பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் சம்பளப்பணம்சுமார் ரூ 11750 ஆயுதம் தரித்த இளைஞர்களால் அபகரிக்கப்பட்டது.

கல்லூரி மாணவர்களின் முழுச் சம்பளப்பணத்தில் கடந்த வெள்ளியன்று 25 ஆயிரம் ரூபாவை எடுத்து திருமலை, யாழ்ப்பாணம், மலைநாட்டுக்குச் செல்லும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

7 இளைஞர்கள் சைக்கிளில் வந்து பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நமது இதயபூர்வமான

தீபாவளி

வாழ்த்துக்கள்





மங்களகரமான

திறப்பு விழா

ARES TEX'ILES

அரஸ் ஜவுளியகம்

நிகழும் இரத்தாஷி வருடம் ஐப்பசி மாதம் 9-ம் திகதி [25-10-84] வியாழக்கிழமை பிற்பகல் 1 12—1 26 மணிவரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில்

ஜனாப் A. S. M. SATHICK

அவர்களால் திறந்துவைக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அரஸ் ஜவுளியகம்

திறப்புவிழா: 25-10-84

146, நவீனசந்தை, மத்தியவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24001 [157]

வல்வையில் கைதாகி 'பூஸா' சென்று

## விடுதலையான இளைஞர் மீண்டும் கைது!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டு, 'பூஸா' முகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் மீண்டும் இராணுவத்தினரால் கைது

(11ம் பக்கம் பார்க்க)

## சலுசலாவில்பெரும்கொள்ளை

(யாழ்ப்பாணம்)

'சலுசலா' ஸ்தாபனத்தின் யாழ் கிளையிலிருந்து பெருந்தொகையான பெறுமதிமிக்க துணிவகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

மணிக்கூட்டுக் கோபுர வீதியிலிருக்கும் 'சலுசலா'வில் நேற்றுக் காலை 11-30 மணியளவில் லொறி ஒன்றில் வந்த இனம்தெரியாத சுமார் தினைந்து பேர் கொண்ட கோஷ்டியினரே கைக்குண்டு

[11-ம் பக்கம் பார்க்க]

## கைதான இளைஞர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையிலுள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 3 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இம்மூவரும், மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதியில் நடந்த திடீர்ச் சோதனையின் போது அழைத்துச் செல்லப்பட்டனர் நேற்றுக்காலை விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டனர் (க)

## காரில் வந்தவர்களிடம் ரூ. 50,000 நகை கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

மண்கும்பானில் காரில் சென்ற குடும்பம் ஒன்று மற்றொரு காரில் வந்த நான்கு இளைஞர்களால் வழிமறித்து கடத்திச் செல்லப்பட்டு சுடுகாட்டில் வைத்து சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 16 தங்கப்பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கரம்பனைச் சேர்ந்த தம்பு செல்வரத்தினம் பொலிஸில் புகார் செய்துள்ளார் மண்குபான் சந்தியில்

[12-ம பக்கம் பார்கக]

## சிங்கராயர் வழக்கு

(கொழும்பு)

வண பிதா ஆபரணம் சிங்கராயருக்கு எதிரான இரண்டு வழக்குகளும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு

(12ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கொட்டடி சீனிவாசகம் ரோட்டிலுள்ள தருமலிங்கம் அவெனியூவில் 2பரப்புக் காணி விற்பனைகுண்டு தொடர்பு திருமதி. தருமலிங்கம் 55 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (353)

கிளிநொச்சி பராசக்தி தியேட்டருக்குக்கிட்ட, ரோட்டருகாமையில் திறமையான 5ஏக்கர் வயல்காணி உடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- T. வேலாயுதம், பாற் தொழிற்சாலை கிளிநொச்சி. (365)

யாழ்ப்பாணம் வண்ணர் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியில் 1½ பரப்பு காணி சிறிய வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பொ.இரத்தினராசா, ''கபே டீ லக்ஸ்'', (பஸ் நிலைய முன் பாக), மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (369)

## விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்தடிக்கும் இடையில் K,K.S. ரோட்டில் இருந்து 25 யார் தொலைவிலுள்ள ஒரு பரப்பு 6 குளிக்காணி [கிணற்றுடன்] விற்பனைக்குண்டு. காணியில் வெள்ளம் நிற்காது பாதை 11' அடி அகலம் ஒரு பரப்பு 1,75000/- தொடர்பு:- T. மகாலிங்கம், Minitone, பூநாறி மரத்தடி, கொக்குவில். 352

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படும் ஸ்தாபனமொன்றிற்கு 5 வருட கால அனுபவமுள்ள லேத்மன் [Lathe-man] தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடனும், கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் 31.10-84 க்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். விளம்பர இல:- 355, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 355

# இரண்டாவது நினைவஞ்சலி

## திருமதி யோகேஸ்வரி வேலாயுதபிள்ளை

(ராசாத்தி)



மறைவு: ஐப்பசி மாத அமரபட்ச சதுர்த்தசி

அன்பின் சிகரமாய், அறிவின் உறைவிடமாய் எம்மையெல்லாம் அரவணைத்து, வழிசமைத்த தெய்வமே! உன் துயர் தாங்காது கவலையுறுகிறோம் சாந்தியடைக.

— அன்பின் கணவர், மகள் சாந்தினி, உறவினர்.

சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 341

# ஈராண்டு நினைவஞ்சலி



உதயம்:

25-12-1929

உதிர்வு:

14-11-1982

## திருமதி பற்குணராசா யோகம்மா

அன்பே உருவான எங்களைக் காத்திட்ட குல விளக்கே நீங்கள் இறந்து ஈராண்டு பூர்த்தியாகியும் எம் உள்ளத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், பேரன்மார், தம்பிமார், மருமக்கள்.

யோகா பெயின்ற் ஹவுஸ்,
பைவ் ஸ்ராஸ் சுவீற்ஸ் இன்டஸ்றீஸ்,
யாழ்ப்பாணம், ஒட்டுமடம். 313



# புகழோடு தோன்றியவர்

''தோன்றிற் புகழோடு தோன்றுக'' என்பது வள்ளுவர்வாக்கு இத்தகைய புகழை தம்முடன் நிலைபெறச் செய்தவர்கள் சிலரே. அவர்களில் அண்மையில் அமரரான கார்த்தியேசு செல்லையாவும் ஒருவர் அன்னாரின் மறைவு கிளிநொச்சித் தொகுதிவாழ் விவசாயிகளுக்கு பெருமிழப்பையும் ஆழ்ந்ததுயரையும் ஏற்படுத்தியுள்ளது. கரைச்சிக்கிராமசபையின் தலைவராக அமரர் செல்லையா பணியாற்றிய காலங்களில் அன்னார் செய்த தொண்டுகள் அளப்பரியன.

முரசுமோட்டை கிராமமுன்னேற்றச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பயிர்செய்கைக்குழு, முருகன் ஆலயம், முருகானந்தா மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் உட்பட அனேக பொதுஸ்தாபனங்களில் முக்கிய பதவிகளில் இருந்து சிறப்பாகவும் திறமையாகவும் நேர்மையாகவும் பணியாற்றியவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஆரம்ப காலத்தில் ஈடுபாடு கொண்டு பிற்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தம்மை இணைத்துக் கொண்ட அமரர் செல்லையா தான் சார்ந்த அரசியல் இயக்கங்களால் ஆரம்பிக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் முன்னணியில் நின்று உறுதியுடன் இறுதி மூச்சுவரை உழைத்தார்.

அமரர் செல்லையா, கரைச்சிக்கிராம சபைத் தலைவராக இருந்தகாலத்தில் அனேக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் துன்பக் கண்ணீரைத் துடைத்த தூயவன் இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் தன் அரசியல் எதிரணியினரைத் தான் சார்ந்த அரசியல் அணியில் இணைப்பதற்கு இடையருத முயற்சிசெய்தவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

-என். எஸ். கே. இலட்சுமணன்

## ரூபவாஹினியில் தீபாவளி நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

தீபாவளி தினத்தை முன்னிட்டு 'வரணியூரான்' எழுதிய ''காத்திருந்தவன்'' என்னும்30நிமிட நகைச்சுவைநாடகம் ரூபவாஹினியில் இன்று இரவு ஒளிபரப்பப்படுகின்றது.

எஸ். எஸ். கணேசபிள்ளை, கே. எஸ் பாலச்சந்திரன், குணபதி கந்தசாமி, ஆர். எஸ். சோதிநாதன், பத்மகுமாரி, குஹபாலன், ஜே. மோகனு ஆகியோர் நடிக்கும் இந்தநாடகத்தை எஸ். விஸ்வநாதன் தயாரித்தளிக்கிறுர்.

## 'மல்லிகை' கருத்தரங்கு

[புலோலி]

மல்லிகை 20-வது ஆண்டு மலர் கருத்தரங்கு புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் நடாத்தும் இவ்விழா கழகத் தலைவர் லயன். டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறும். திரு டொமினிக் ஜீவா, பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஆ. தேவராசா தெணியான் உட்படப் பலர் கலந்து கொள்கின்றனர்.

# செம்மணி மயானம்

## சுகாதாரத்தைப் பேணுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். அபிவிருத்திச் சபையின் செம்மணி மயானத்தில் பிரேதங்கள் தாழ்க்கப்படுவதெற்கென ஒதுக்கப்பட்டுள்ள சுடலையின் தென்பகுதியில் பிரேதங்களைத் தாழாது, சிலர் சுடலைமடம் அமைந்துள்ள வடக்குப்பகுதியில் பிரேதங்களை தாழ்ப்பதாக, யாழ் அபிவிருத்திச்சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

இதனுல் சுகாதார நலனை முன்னிட்டும், மயானத்தின் பரிபாலன வசதியை முன்னிட்டும் பிரேதங்களை தாழ்ப்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ளசுடலையின் தெற்குப்பக்கத்தில் பிரேதங்களை தாழ்க்குமாறு யாழ். அபிவிருத்திச்சபையின் கோப்பாய் உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்பதியோகத்தர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

## சிங்கப்பூரில்

# பதவிகள் வெற்றிடம்

நன்மதிப்புள்ள வீடுகளில் உதவி வேலையாளர்களாகப் பணிபுரிவதற்கு பணிப்பெண்கள் தேவை வயது 20—30. ஆங்கில அறிவு அவசியம். இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் ஏனைய சகல வசதிகளுடன் போதிய சம்பளம் வழங்கப்படும். வேலை 'பெர்மிட்' கிடைத்தவுடன் உடனடியாக அனுப்பப்படுவர். பாஸ்போட்டுடன் உடனடியாக பின்வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

சட்டரீதியான கட்டணம் தவிர மேலதிகமாக எதுவும் அறவிடப்படமாட்டாது.

ச. வரதராசா,
தலையாளி ஒழுங்கை, கொக்குவில்.
[வைரவர் கோவிலிலுக்கு அண்மையில்]

லேபர் லைசென்ஸ்: இல; 252.

உத்தரவாத இல: FE/ 6/ FEA/ 560/ 4750

375

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## தம்பித்துரை சோமசுந்தரம் (சோமு)

மலர்வு: 17-11-1927

மறைவு: 23-9-1984

எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மைவிட்டு இறைவனடி சென்ற
உங்களை நாங்கள் எங்கள் இதயங்களில்
என்றுமே நினைவு கூர்வோம்!

அவரின் பிரிவால் வாடுகின்ற

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

62, கஸ்தூரியார் வீதி,
திருநெல்வேலி. (382)

# 31வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## செல்வி நல்லதம்பி கெங்கேஸ்வரி

மலர்வு: 22-09-1962

உதிர்வு: 23-09-1984



ஆறுத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட பாசப்பிணைப்பே, உமது பிரிவால் உளம் உருகும் அன்புத் தந்தை, தாய், மனம் கலங்கி ஏங்கும் அன்புச் சகோதரங்கள், மைத்துனர்கள், உமது பிரிவால் வாடும் உற்றூர், உறவினர் உமது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

23-09-84 அன்று அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும். மற்றும் உதவி புரிந்து துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

பெற்றோர், சகோதரங்கள், மைத்துனர்கள், உற்றூர், உறவினர்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். 370

# அங்கீகரிக்கப்படாத கட்சிகள் வெளியார் உதவிபெறத்தடை!

## இந்தியாவில் புதிய சட்டம்

(புதுடில்லி)

அங்கீகரிக்கப்படாத அரசியல்கட்சிகள் வெளி நாடுகளிலிருந்து நிதி உதவி பெறுவதை தடுக்க இந்தியா புதிய சட்டம் ஒன்றைகொண்டு வந்துள்ளது.

நாசவேலைகளில் ஈடுபடுவோரைத்தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவை ராஷ்டிரபதி நேற்று அவசர பிரகடனமொன்றின் மூலம் பிறப்பித்தார்.

நீதிபதிகள் வெளிநாட்டு உதவி பெறுவதைத் தடுக்கவும் புகிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## ராஜீவ் விஜயம் ஒத்திவைப்பு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ராஜீவ்காந்தி இம்மாதக் கடைசியில் மேற்கொள்ளவிருந்த தமிழகவிஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் எம். ஜி ராமச்சந்திரன் சுகவீனமுற்றிருப்பதால் இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# "கலைஞர்களை கைதூக்கி விடுபவர் எம். ஜி. ஆர்."

(மாவிட்டபுரம்)

''கலைஞர்களை கைதூக்கி விடுவதிலும் கலைகளைப்பேணிப் பாதுகாப்பதிலும் முன்னின்று உழைத்து வரும் தமிழக முதல்வர் திரு. எம் ஜி.இராமச்சந்திரன் விரைவில் பூரண சுகம் பெற வேண்டுமென இலங்கை நாதஸ்வர-தவில் கலைஞர்கள் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வாறு இலங்கை இசை வேளாளர் சங்கத் தலைவர் திரு. என். ஆர். சின்னராசா, செயலாளர் திரு எஸ். ஆர். ஞானசுந்தரம் ஆகியோர் சங்கத்தின் சார்பில் அமைச்சர் நெடுஞ்செழியனுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

கலைஞர் ஒருவர் முதல்வராக வந்தமையிட்டு கலை உலகம் பெருமிதமடைந்தது அவர் கலைஞரான படியால் கலைஞர்களுக்கு உதவ என்றுமே பின் நின்றதில்லை. பாரம்பரியக் கலைகளான நாதஸ்வர- தவில் கலைகளை வளர்க்க அவர் பெரிதும் உதவியளித்து வந்துள்ளார்- விரைவில் அவர் பூரண சுகம் பெற்று தொடர்ந்தும் கலைத்துறைக்கு சேவையாற்றும் நிலைஏற்பட வேண்டுமென இலங்கை நாதஸ்வர- தவில் கலைஞர்கள் சார்பில் பிரார்த்திக்கின்றோம். என்று அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய ராஷ்டிரபதியின் வெளிநாட்டு விஜயம்

(புதுடில்லி)

இந்திய ராஷ்டிரபதி திரு. ஜெயில்சிங் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு மொரிசியஸ். வடஜெர்மன், தென்ஜெர்மன் ஆகிய நாடுகளுக்கு பயணமானார்.

முதலில் மொரிசியஸ் தீவிற்கு செல்லும் ராஷ்டிரபதி, அங்கு இந்தியர்கள்குடியேறிய150வது ஆண்டுக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வார்.

ஜவகர்லால் நேரு ஞாபகார்த்தமாக மொரிசியஸில்கட்டப்பட்டுள்ள ஆஸ்பத்திரியையும் அவர் திறந்துவைப்பார்.

அவருடன் வெளியுறவுஇணை அமைச்சர் ஏ. எல். ரஹீம், அமைச்சின் செயலாளர் ஆகியோரும் செல்கின்றனர்.

பின்னர் ராஷ்டிரபதி, வடஜெர்மன், தென்ஜெர்மன் ஆகிய நாடுகளுக்கு செல்வார், இந்திய ராஷ்டிரபதி ஒருவர் இந்தநாடுகளுக்குச் செல்வது இதுவே முதல்தடவையாகும்.

## விடுதலைப்போராளி சௌந்தரம் காலமானார்

(மதுரை)

முன்னாள் மத்திய சுகாதார துணை அமைச்சரும் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டவருமான திருமதி டாக்டர் சௌந்தரம் நேற்றுமுன்தினம் மதுரையில் காலமானார். இவருக்கு வயது 80ஆகும்.

1962ம் ஆண்டு பத்மபூஷண் விருந்து பெற்ற இவர் 'காந்தி கிராம்' பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் இருந்தார் இவர் மறைவுகுறித்து இந்தியப் பிரதமர் இரங்கற் செய்தி யொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

முல்லைத்தீவில் அடைவு நகைகளை

# மீட்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் அடைவுவைத்த நகைகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு பிரஜைகள் குழு, அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரனை சந்தித்து கோரியுள்ளது. நகைகள் பாதுகாப்பு கருதி, கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டிருப்பதாகவும் அக் குழுவினர் தெரிவித்தனர்.

இது பற்றி மக்கள் வங்கி முகாமையாளரைச் சந்தித்து மனுஒன்றை, சமர்ப்பிக்குமாறும், தானும் இதுபற்றி அவருடன் தொடர்பு கொள்வதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார், நகைகளை அடவு வைத்தவர்கள் வங்கிக்கு வசதியான ஒரு இடத்தில் வைத்து நகைகளை தர மக்கள் வங்கியாளர் முன் வந்தால் தாங்கள் அந்த இடத்திற்கு சென்று நகைகளை பெற்றுவர தயாராக இருப்பதாகவும் பிரஜைகள் குழுவினர் கூறினார்கள்

## இந்திய லோகசபைத்தேர்தல் தகவல் தொடர்புகளை சீராக்க நடவடிக்கை

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் எதுவித தடையுமின்றி தகவல் தொடர்பு சேவைகள் சீராக நடைபெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை தகவல் இலாகா எடுத்து வருகியது.

தந்தி, தொலைபேசி சேவைகள் சீராக நடைபெறுகிறதா என்பதை உறுதிசெய்ய புதிய நடவடிக்கைகள் உதவும்

# கச்சதீவில் இலங்கை ராணுவத் தளம்!

### தடுத்து நிறுத்த இந்திராவிடம் கோரிக்கை

(சென்னை)

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் கச்சதீவில்இராணுவத் தளம் அமைத்து செயல்பட்டு வருவதினை உடனடியாக தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கோரும் அவசரத்தந்தியொன்றை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி ஆனந்தன் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திக்குஅனுப்பி வைத்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்வதற்கும், பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் கைப்பற்றப்பட்ட வள்ளங்களை திரும்பவும் ஒப்படைக்கவும் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அத் தந்தியில் அவர் தெரிவித்துள்ளார்.

## தங்கச் சுரங்க பாதைகள்

(புதுடில்லி)

கேரளாவில் தங்கச் சுரங்க பாதைகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஐ நா. உதவியுடன் நடைபெற்று வந்த அபிவிருத்தித் திட்டத்திலேயே இந்தப்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை டிப்போ

# 21 ஊழியர்களுக்கு மீண்டும் வேலை கிடைத்தது

(கரவெட்டி)

கடந்த மேயாதம 6ம் திகதி இரவு பருத்தித்துறை டிப்போவில் இடம்பெற்ற சுமார் 96 ஆயிரம் ரூபாய் கொள்ளைச் சம்பவ காலத்தில் அந்த டிப்போவில் கடமையாற்றி வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட சாலை அத்தியட்சகர், முகாமையாளர், செயலாற்றுப் உதவியாளர் உட்பட 21 ஊழியர்களுக்கும் மீண்டும் வேலைவழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணை கடந்த 14ம் திகதி வடபிராந்திய போக்குவரத்துச்சபை அலுவலகத்தில் நடைபெற்றது

விசாரணைகளிலிருந்து இவர்கள் நிரபராதிகள் என்று விசாரணைக்குழு சிபார்சு செய்ததையடுத்து இவர்களுக்கு இம்மாதம் 18ம் திகதி முதல்மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது அத்துடன் இவர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட காலப்பகுதிக்குரிய சம்பளங்களும் இவர்களுக்கு வழங்கப்படும்.

இவர்கள் பருத்தித்துறையிலிருந்து வெவ்வேறு டிப்போக்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள்.


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605



## விடுமுறை

இன்று தீபாவளிபண்டிகை காரணமாக ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் நாளை 'ஈழநாடு' பத்திரிகை வெளிவரமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

ஈழநாடு நிர்வாகி

## மணிவாக்கு

அந்த விநோதமான விடுதலை உணர்ச்சியும், நாணமும் அறிவான தீர்மானங்கள் செய்தவர்களுக்கு வருகின்றன.

— ஸ்டீபென்லின் சென்பெனட்

# நமது நோக்கு

## தீபாவளி சிந்தனை

மனிதனின் அசுர குணங்கள் அகன்று அன்பும், அறமும் தழைத்தோங்குவதற்கு வழிகாட்டுவதாகவே தீபாவளிப் பண்டிகை தோன்றியது. துன்பம் நீங்கி இன்பமும், ஆணவ வெறிகொண்ட அசுர ஆட்சி தொலைந்து நீதியும், தருமமும் பூமியில் நிலைகொண்டமையை நினைவுறுத்துவது இப்புனித நாள்.

இந்துக்கள குறிப்பாகத் தமிழர்கள் இந் நாளைத் தொன்றுதொட்டுக் கொண்டாடிவருகிறார்கள். ஆனால் இன்று நாம் உள்ள நிலையில் பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டா? அவசியம் கொண்டாடித்தான ஆகவேண்டுமா என்ற கேள்வி இயற்கையாகவே எழுகின்றது.

ஒரு சமுதாயத்தின் இரத்தத்துடன் ஊறிப்போன சில பண்பாடுகளை, நடைமுறைகளை இலகுவில் மாற்றிவிடுவது சாத்தியமில்லை.

நம் முன்னோர்களால் சில இலட்சியங்களின் அடிப்படையில், பண்பாட்டு ரீதியில் இம்மாதிரியான பண்டிகைகள் உருவாக்கப்பட்டன. அவை பாரம்பரியமாகவே கொண்டாடப்பட்டும் வருகின்றன.

உண்டுகளித்து, குடித்து வெறித்து, வெடிகள் கொளுத்தி களியாட்டங்கள் நடத்துவதுதான் பண்டிகை, கொண்டாட்டம் என்று கருதப்படுமானால் நிச்சயமாக அது உடனடியாகவே பலவந்தமாக வேணும் சமுதாயத்தின் நடைமுறைகளிலிருந்து அறவே களைந்தெறியப்படவேண்டும்.

அவ்வாறான நோக்கத்துடன் தமிழ் கொண்டாட்டங்கள் உருவாக்கப்படவில்லை. சுயநலமிகளும்சமூகவிரோதிகளும் தமது சொந்த நலனுக்காக அவ்வாறு பண்டிகைகளைப் பயன்படுத்திக் கொண்டுவந்துள்ளார்கள்.

சமுதாயத்தைப் பீடித்துள்ள பீடைகள் தொலைவதற்காக, நோன்பிருந்து இறைவனைவேண்டி பிரார்த்தனைகளில் ஈடுபடுவதே இன்றைய நாளில் நம்மவர்மேற்கொள்ளக்கூடிய முக்கிய பணியாகும்.

தமிழர் சமுதாயம், உலகின் எந்தப்பாகத்தில்இருந்தாலும் இன்று மாபெரும் சோதனையான ஒரு காலகட்டத்தைகடந்துகொண்டிருக்கின்றது. அவர்கள்மனமெல்லாம் இலங்கையைப் பற்றியும், இலங்கையில் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றியுமே எண்ணிமாய்கின்றன.

''விடிவுவராதா, வேதனை தீராதா'' என அவர்கள் எழுப்பும் துயரக்குரல் உலகின் பல பாகங்களிலும் எதிரொலிக்கின்றன — ஐ நா. சபையிலே, அணிசேரா நாடுகளின் அவையிலே, மனித நீதிக்காகக் குரல்கொடுக்கும் மேடைகளில் எல்லாம்இலங்கைத்தமிழரின் அவலக்குரல் கேட்கவே செய்கின்றது.

அன்று யாரிடமிருந்து அருளும், அசுரபலமும் பெற்றானோ அந்த இறைவனையே அழித்துவிட்டு அந்த இடத்தில் அமர்ந்து கொள்ள முனைந்த அசுரனால், பூலோகம் மட்டுமல்ல, தேவலோகமே அச்சத்தில் உழன்றது.

மாபலியை ஒழிக்கவாமனனாகவும், இரணியனை அழிக்க நரசிம்மனாகவும், இராவணனை அழிக்க ராமனாகவும், சூரபத்மனை அழிக்க சுப்பிரமண்யனாகவும், வந்து காலத்துக்குக்காலம் இறைவன் நீதியையும், தர்மத்தையும் நிலைநாட்டியுள்ளார் என அறிகின்றோம்.

சூரிய அஸ்தமனமே இல்லாத சாம்ராஜ்யத்தைப் பெற்றுவிட்டோம் என்று இறுமாந்து நின்ற பிரிட்டிஷ் ராஜ்யத்தை ஆயுதமே இல்லாமல் புறமுதுகு காட்டி ஓடச்செய்யும் சக்தியைக் காந்தி என்ற ஒரு 'அரை நிர்வாண பக்கிரிக்கு' இறைவன் வழங்கவில்லையா!

எனவே நாம் செய்யும் தவத்தின்வழியிலேயே நமது பலமும், இறைவனின் அருளும் கிட்டும் என்பதை உணர்வோம். அந்தசக்தியையும் வலிமையையும் இறைவனே ஏதோ ஒரு வழியில் நமக்கு ஏற்படுத்தித் தருவான் அதற்கான முயற்சியில் தளர்ந்துவிடாமல் முனைந்து நிற்பதே நமது கடமை. அதற்கு இன்றைய பண்டிகைப் பொழுதும் பயன்தருமாக.

எமது சமுதாயம் மீண்டும் இந்த நாட்டில் தன்மானத்துடன், சரி சமமாக தலைநிமிர்வதற்கு இறைவன் வழிகாட்டுவானாக!

எப்பொழுதும் போலவே காலையில் எழுந்து முழுகி, தூய ஆடை புனைந்து இறைவன் வாயிலை அடைந்து வணங்குவோம். வந்த பிணிகள் எல்லாம் ஒழிந்திட இறைஞ்சுவோம் பண்டிகையைப் பயனுள்ளதாக்குவோம்!

# மனையிருள் போக்கி மனயிருளை அகற்றும் மங்களத் தீபாவளி



இந்துக்களின் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. ஐப்பசி மாதத்து கிருஷ்ண பட்சத்து சதுர்த்தி தினத்தில் அதாவது, ஐப்பசிமாதத்துத் பதினாலாம் தேய்பிறையில் கொண்டாடப்படும் திருநாள். நரகாசுரனைக்கொன்று உலகுக்கு விமோசனம் அளித்த கிருஷ்ணனின் பெருமையையும், சத்தியபாமாவின் வீரத்தையும் நினைவூட்டுவது இப்பண்டிகையின் நோக்கமாகும்.

தீபாவளி என்பது தீப+ ஆவளி என பிரிபடும். தீபம் என்றால் விளக்கு; ஆவளி என்பது வரிசை, தீபங்களை வரிசையாக ஏற்றுவதையே தீபாவளி என்ற சொல் குறிக்கின்றது. புராணங்களில் தீபத் திருநாளைப்பற்றிக் கூறும் கதையை இங்கே பார்ப்போம்.

பூர்வகாலத்தில் ''பிரக்ஜோதபுரம்'' என்ற நகரத்தில் நரகாசுரன் என்ற அரசன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் கொடியவன், துட்டன். ஆனால் பிரம்மதேவனைக் குறித்து அருந்தவம் புரிந்து பெறக்கரிய வரங்களைப் பெற்றிருந்தான். இதனால், அவன் மிகபராக்கிரமசாலியாக ஆணவம் மேலோங்கி இருந்தான். எவரையும் மதிக்காமல் தன்னிச்சையாக நடக்கலானான். பிரமதேவனிடம் பெற்றவரத்தினால், மூவுலகையும் அடக்கியாள முற்பட்டான் கொடுமைகள் பல புரிந்தான். தேவலோகத்தில் இந்திரனுடன் போரிட்டு வென்றான். இந்திரனின் அன்னையரின் காதணியாகிய மகா குண்டலங்களை அபகரித்துச் சென்றான். அக்கிரமங்கள் தலைவிரித்தாடின. அதர்மங்கள் தலையெடுத்தன.

நரகாசுரனின் அக்கிரமங்களைச் சகிக்க முடியாத தேவர்களும்; ஏற்கனவே நரகாசுரனால் துன்புறுத்தப்பட்ட பதரிகாச்சிரமத்து முனிவர்களும் இந்திரன் தலைமையில் துவாரகாபுரியைச் சென்றடைந்தனர். அவர்கள் அங்கே கிருஷ்ண பரமாத்மாவிடம் நரகாசுரனின் அக்கிரமங்களையும், கொடுமைகளையும் எடுத்துரைத்தனர். வேண்டுவார்க்கு வேண்டுவன அருளும் பெருந்தகையான பகவான் துயர் துடைக்க திருவுளம் கொண்டார்.

பகவானும் தேவியான சத்தியபாமாவும் நரகாசுரனை வதம் செய்ய பிரக்ஜோதபுரம் சென்றனர். இதை உணர்ந்த நரகாசுரன் சமருக்கு தனது படையையே ஏவிவிட்டான், சிலநொடிகள், பெரும்படை அழிந்தது. கோபங்கொண்டான் நரகாசுரன். எனக்கு நிகராகப் போர்புரிய இவர்களால் முடியுமா? என அகந்தைகொண்டு பகவானுடன் நேரில் மோதினான். பிரம்மனின் வரத்தினால், அவன் ஏவிய அஸ்திரங்கள் பகவானைக் கதிகலங்கச் செய்தன. நாயகி சத்தியபாமாவோ கலங்கவில்லை. தன் நாயகனுக்குத் துணையாக

[9-ம் பக்கம் பார்க்க]

— ஐயா. சச்சிதானந்தம்—

# நவீன ஜப்பானின் பரம்பரை இடைவெளி

நேற்று, இன்று, நாளை என்ற பிரிவினை ஒன்றுக்கொன்று தொடர்புடையது; எனவே வருங்காலத்தை நிர்ணயிக்க இறந்த காலம், நிகழ்காலம் நன்றாகப் புரியவேண்டியது அவசியமென்று சாதாரணமாகக் கருதப்படுகிறது.

இந்தவகையில் இன்று செல்வத்தில் மிதக்கும் மக்களும் நாடுகளும் வருங்காலத்திலும் அந்த நிலையைப் பேணமுடியுமென பொதுமக்கள் நம்புவது இயற்கை.

### ஜப்பான்

உண்மையில் இக்கருத்துத் தவறானதென்பதை நாம் உணரவேண்டும். மனித உடம்பே இதற்கு உதாரணமாகின்றது. அதன் பல்வேறு பட்ட நிலைகள் ஈற்றில் அழிவுக்குள்ளாவதை நாம் அசட்டை செய்யமுடியாது. இலை, மொட்டு, மலர், காய், கனி போன்று உதிர்ந்து விழும் வரலாறு மனித சமுதாயத்துக்கும் பொருத்தமாகிறது. மனிதபரம்பரை இடைவெளியும், பொருளாதார விருத்தியும் கொண்ட இன்றைய ஜப்பான் இந்த உண்மைக்கு புறம்பானதல்ல.

வரலாற்று ரீதியில் ஏழை விவசாயமக்கள் தங்கள்உழைப்பினால் செல்வத்தைத் தேடிச் சிறப்பாக வாழ்ந்தார்கள். அக்கால ஜப்பானிய மக்கள் பாமர மக்களாயிருந்தபோதும் திருப்தியுடன் வாழும் வசதி தாராளமான அறுவடையில் தங்கியிருந்தது. மக்கள் ஜனத்தொகை பெருகியதற்கும் இதுவே காரணம். கபடமற்ற, பண்புடையமக்கள் வாழ வகுத்த பசுமைப்புரட்சி, மக்கள் ஜனத்தொகையைப் பெருக்கியதால் வரலாற்றின் அடுத்த படி ஆரம்பமானது.

ஜனப்பெருக்கம் என்ற பிரச்னை உணவு உற்பத்திக்கு

**எழுதியவர்**
**ஜிரோ**

பாதகமான வேளையில் பட்ட காலிலேபடுமென்ற பாங்கில், தொற்றுநோய், பஞ்சம், பூகம்பம் போன்ற துன்பங்கள் நாட்டை நலிவுறுத்தின. இவை அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு ஒருகட்டுப்பாடாக அமைந்ததை விளக்கவேண்டியதில்லை.

இவற்றை சமாளிக்கும் கட்டத்தில் கைத்தொழில்நாடாக வளர்ச்சியுறுவதே தவிர்க்க முடியாதகாரியமென்று ஜப்பான் கங்கணம்கட்டியது.

மேற்கத்திய நாடுகளின் தொழிலமைப்பும் மக்களின் இயல்பான சுறுசுறுப்பும் ஒன்றிணைந்த சமயத்தில் ஜப்பான் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக ஆசியாவின் தலைமைதாங்கும் அளவிற்கு பொருளாதாரத்தில் தலைநிமிர்ந்தது.

### இரண்டாவது உலகயுத்தம்

இந்தநிலையிலும் மக்கள் தங்கள் பாரம்பரிய வாழ்வைக் கைவிடவில்லை: பிறந்தபொன்னாடே தெய்வம் என்றகோட்பாடு ஜப்பானியமக்களால் எந்த நிலையிலும் கைவிடப்படவில்லை. அதேசமயம் ஆசிய நாடுகளுக்குரித்தான சமய வாழ்வு, அதன் கோட்பாடுகள் சமூகவாழ்வில் பெரிதாகப் பரிணமிக்கும் பண்பு ஜப்பானுக்கு ஒருதனித்துவ இடத்தை அளித்துவந்தன.

செல்வம் கொழிக்கும் நாடென்பதும், ஐரோப்பாவில் ஹிட்லர் முசோலினி போன்ற சர்வாதிகாரிகள் ஒரு புதுஉலகத்தைப் படைக்கவல்லவரென்ற நம்பிக்கையும், ஆசியாவில் ஜப்பான் தலைமை கொள்ளத்தூண்டியன.

நேசநாடுகளை ஆதரித்து அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியதும் அதற்கெதிராக ஜப்பான் யுத்தத்தில் குதித்தது பேரதிர்ச்சியானநிகழ்ச்சி.

இயற்கையால் வரும் தண்டனைக்கு ஆளான ஜப்பானுக்கு யுத்தம்செயற்கை யமனானது. இரண்டாவது உலக யுத்தத்தில் 90 சத தொழில் வசதிகளும், வளங்களும் சுக்கு நூறாகப் போயின. ஜப்பான் அமெரிக்காவின் அடிமையாகுமோ என்ற அச்சம் அணுக்குண்டுச் சம்பவத்தால் எழுந்தது.

### நவீன ஜப்பான்

அதற்கு நேர்மாறாக அமெரிக்க ராணுவத்தளபதி மக்காதர் ஜப்பானிய அரசையும், மக்களையும் உலகம எதிர்பாராத வகையில் மதித்து நாடு குணமடைய தம்முடைய பண்பான நிர்வாகத்தால் பெரிதும் உதவினர்.

### இன்றைய அற்புதம்

அதன் விளைவே இன்றைய ஜப்பான் பழமையென்னும் மூலவேர் தாக்கப்பட்டபோதும் அது புத்துயிர் பெறும்ஆற்றலை இழக்கவில்லை.

ஒட்டுமாங்கன்றுபோல இன்று விரைவில் உருவான ஜப்பானின் புது நாகரிகம் ஜப்பானிய மக்களின்பரம்பரை வாழ்க்கை முறையை முற்றாகப் புறக்கணிக்கவில்லை.

இன்றைஆட்சிமுறை பெரும்பாலும் இன்றைய ஜப்பானிய இளஞ்சந்ததியினர் பொறுப்பில் இருக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)


நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம்
கந்தசஷ்டி உற்சவம் நாளை 1ம் திருவிழா.


## முருகன் மலரடி பணிவோம்

இராகம்: கேதாரகௌளை . தாளம்: ஆதி

பல்லவி

ஏறுமயில் ஏறிவரும் எங்கள்பெருமான்
இமையவரைச் சிறைமீட்ட கந்தப்பெருமான்- (ஏறு)

அனுபல்லவி

நாறுமாலைக்கடப்பமார்பன் நலம்பல ஈந்திடுவான்
நண்ணிடும் அடியருள்ளம் நாடியே உறைந்திடுவான் (ஏறு)

சரணம்

சங்கப்பலகையமர்ந்து தங்கத்தமிழ் உரைகண்டான்
சாற்றரிய அழகனவன் தணிகாசலத்துறைவான்
பொங்கும் அருள்மிகுந்தோங்குபுனிதன் நீர்வைப் பதியன்
மங்களங்கள் தந்திடுவான் மலரடி பணிவோமே- (ஏறு)

முருகதாசன்

## தீபத்திருநாள் மலர வாழ்க!

கடமை தவறும் சிறுமைச் செயலும்
சோம்பல் கொண்டு செய்வதை மறப்பதும்
தன்னலங்கொண்டு அன்பைத் துறப்பதும்
இன்பம் நமக்கே உரித்தெனக் கொள்வதும்
எவரும் என்னைப்போல் இலையெனுஞ் செருக்கும்
நாட்டை மறக்கும் கயமைச் செயலும்
மொழியைப் பேணு துழலும் வாழ்வும்
கடிதில் மாய்ந்து ஒழித்திட வந்திடும்
தீபத்திருநாள் வந்தது—வந்தது
வந்தது வந்தது மகிழ்வுள வந்தது.

— "வண்ணையூரான்"

## இன்றைய பலன்

மாதம்-ஐப்பசி
திகதி-7 (23-10-1984)
வாரம்-செவ்வாய்
திதி-சதுர்த்தசி முன் இரவு 8-55 வரை
நக்ஷத்திரம்-அத்தம் முன் இரவு 6-56 வரை

மேடம்: சிந்தையிலே தடுமாற்றம் ஏற்படும் செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று.

இடபம்: தக்க சமயத்தில் தந்தையின் உதவி கிடைக்கும். தெய்வசிந்தை மேலிடும் ஸ்தலயாத்திரை யொன்றும் மேற்கொள்ளப்படலாம்,

மிதுனம்: பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும் கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும்.

கடகம்: சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும், பிதா வழிச் சுகம் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு, முதியவர் ஒருவரின் அறிவுரை முன்னேற்றமளிக்கும்.

சிங்கம்: பகைவர்கள் பதுங்குவர் பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

கன்னி: மனக்கோட்டைகட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும் இன்ப சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம், அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

துலாம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள், இதன் மூலம் பணமும் செலவாகும்,

(7-ம் பக்கம் பார்க்க)

## நரகாசுரன் போர்!

சாத்திரங்கள் எல்லாமே படித்துமென்ன
சஞ்சலங்கள் தீர்க்கவொரு வழியுங்காணோம்
தோத்திரங்கள் ஓதியுமை தோத்தரித்தோம்
தொந்தரவு வளர்பிறையாய் வளருதன்றோ
நேத்திரங்கள் இமையாத நேமிநாதா
நெக்குருகும் உள்ளமதை நிமிரப்பண்ணி
பத்திரமாய் வாழ்வதற்கு வழிதானென்னே
பாண்டவற்குத் தூதுவனே பகரா யொன்று.

துன்பமென்னும் பெருமழையில் நனைந்துமக்கள்
தூக்கமின்றி வாடுகையில் தூக்கமேனோ
மன்பதைகள் காப்பதுன்றன் கடமையன்றோ
மானிடரின் வடிவமெல்லாம் தாங்கிவந்து
என்புருக அருளுகின்ற எந்தாய் எங்கள்
ஏழ்மைகளை அகற்றி உன்றன் திருவருளாம்
இன்பமதை அளிப்பதற்கு சுணக்கமேனோ
இலங்குகின்ற வல்லிபுரம் இருக்கும் தேவே.

— ஆழ்கடலான்.

### மாணவர்கள் கைது:

## பிரதிநிதிகள் குழுவினர் அரசஅதிபரை சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்களை இராணுவத்தினர் கைதுசெய்தது தொடர்பாக கல்லூரி மாணவர் பிரதிநிதிகள்குழு, யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உடனடியாக குருநகர் இராணுவமுகாம் பொறுப்பதிகாரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியதன் பேரில் கைதுசெய்யப்பட்ட மூன்று மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக இராணுமுகாம் பொறுப்பதிகாரி தெரிவித்ததாக, அவர் மாணவர் பிரதிநிதிகளுக்குச் சொன்னார்.

குறிப்பிட்ட 3 மாணவர்களும் பாடசாலையிலிருந்து மதிய உணவுக்குச் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனராம்.

கடந்த 17ந் திகதி பிற்பகல் 2-15 மணியளவில் சுமார் 100 மாணவர்கள், யாழ். செயலகத்துக்குள் சென்று அரசாங்க அதிபரைச் சந்தித்து 3 மாணவர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டது குறித்து ஆட்சேபனை கிளப்பினார்கள்,

மாணவர்கள் கைதுசெய்யப்படநேரிடில் அவர்கள் படிக்கும் கல்லூரி அதிபர் முன்னிலையில் வைத்து விசாரணை செய்த பின்னரே கைது செய்யப்படுவர் என்று யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி, கல்லூரி அதிபர் சங்கக் குழுவுக்கு உறுதியளித்திருந்ததாகவும், ஆனால் கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் மூவரும் கைது செய்யப்பட்ட விஷயத்தில் இணைப்பதிகாரி அளித்த வாக்குறுதி மீறப்பட்டுவிட்டதாகவும் மாணவர்கள் பிரதிநிதிகள் அரசாங்க அதிபரிடம் கவலை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ் அரசாங்க அதிபர், இணைப்பு அதிகாரி கொழும்பு சென்றுவிட்ட நேரத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாகவும், மற்றும் பொறுப்பதிகாரியுடன் தாம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்ததைத்தொடர்ந்து மாணவர் பிரதிநிதிகள், அலுவலகத்தை விட்டு வெளியேறியதாகவும் மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார், (மா)

## கூடுதல் விலையில் மைசூர் பருப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் மைசூர் பருப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பொது மக்கள் கூடுதல் விலையைக் கொடுத்தே தனியார் கடைகளில் மைசூர் பருப்பை கொள்வனவு செய்து வருகின்றனர்.

## இந்திரா — எம். ஜி .ஆர் உணர்ச்சி பூர்வமான சந்திப்பு

(சென்னை)

கடந்த 16ம் திகதி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சுகவீனமுற்றிருக்கும் தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ராமச்சந்திரனைப்பார்க்க விமானத்தில் விரைந்து வந்தார் அல்லவா. அன்றைய தினம் பிரதமரும் எம். ஜி. ஆரும் பத்துநிமிடமே சந்தித்துக் கொண்ட போதிலும் அச் சந்திப்பு மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது என நேரில் கண்டவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கியவுடன் நேராகவே அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு திருமதி காந்தி காரில் சென்றார். அப்பல்லோ ஆஸ்பத்திரியின் அதிபர் டாக்டர் பிரதாப் சி.ரெட்டி பிரதமரை மூன்றாவது மாடியில் எம்.ஜி. ஆர் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு 10 நிமிடங்கள் பிரதமர் இருந்தார். பிரதமர் வந்திருக்கிறார் என்று அறிந்ததும் எம். ஜி. ஆர் எழுந்து உட்கார முயன்றார். டாக்டர்கள் அவருக்கு உதவினார்கள். அவர் விரைந்து குணமாக வேண்டுமென முழுதேசமுமே பிரார்த்தித்து வருகின்றது என பிரதமர் பலதடவைகள் திருப்பித் திருப்பி எம் ஜி. ஆரிடம் கூறினார். பிரதமர் பேசிய போதெல்லாம் அதனைக் கேட்டு எம். ஜி. ஆர் முறுவல் பூத்தார்.

இச்சந்திப்புப்பற்றி பிரதம

(7-ம் பக்கம் பார்க்க)

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அதிர்ச்சி ஆனால் உண்மை

★ பாடசாலை உபகரணங்கள்
★ மின்சாரப் பொருட்கள்
★ அழகு சாதனப் பொருட்கள்
★ அன்பளிப்புப் பொருட்கள்

யாழ். நகரில் குறைந்த விலையில் தரமான பொருட்களை வழங்கும் ஒரே ஸ்தாபனம்

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்)
யாழ்ப்பாணம்.
போன்: 24291

விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள்

"பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய "சேர்கோப்பூர்"

450 மி. லீ. — 57 ரூபா. 3.25 லீற்றர் — 375 ரூபா மாத்திரமே.

நெல் விதைத்து 7 — 21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"
450 மி. லீ. — 60/- ரூபா. 2 லீற்றர் — 245/- ரூபா.

(2) "ஹெடோனல் எம். 40%"
450 மி. லீ. — 38/- ரூபா

(3) "ஹெடோனல் D. 55%"
450 மி. லீ. — ரூபா 57-50/-

ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ். 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னார்.

# மறுவாழ்வு கண்ட எம். ஜி. ஆர்.

## அமெரிக்க டாக்டர்கள் வெளியிட்ட புதிய தகவல்கள்

[தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு அமெரிக்க வைத்திய நிபுணர்கள் டாக்டர் கிறிஸ்தோபர் பிளாக், டாக்டர் ஈ. ஏ. பிரைட்மன், டாக்டர் ரி. கே. சிறிபாத ராவ், டாக்டர் ஜோன் ஸ்ரேலிங் மேயர் ஆகிய நால்வரும் கடந்த புதன்கிழமை சென்னை வந்து தமிழக முதல்வரைக் கண்டு அவர் உடல்நிலை குறித்து விசாரித்து வைத்திய அறிக்கைகளை படித்துணர்ந்து சிகிச்சையளித்து, அமெரிக்காவுக்கு பத்து நாட்களில் தமிழக முதல்வரை அனுப்பிவைக்குமாறு ஆலோசனை கூறிவிட்டு அமெரிக்கா திரும்பியுள்ளனர். தமிழக முதல்வருக்கு சிகிச்சை அளித்தபின்னர், அமெரிக்க வைத்திய நிபுணர்கள் 'அப்பலோ' ஆஸ்பத்திரியில் இந்திய வைத்திய நிபுணர்களிடம் தெரிவித்த உண்மையான கருத்துக்கள் இங்கு அப்படியே தரப்ப கின்றன.]



முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், குறிப்பாக மூன்று கடுமையான நோய்களின் கூட்டுத்தாக்கத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளார்.

நீரிழிவு, சிறுநீரகம், நரம்பு மண்டலத்தாக்கம் ஆகிய மூன்று நோய்களினுல் பாதிக்கப்பட்டுள்ளார். இதன்காரணமாகவே தான் அவரை உடனடியாக அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல முடியாதிருக்கிறது. அவருக்கு நரம்பு மண்டலத் தாக்கம் மட்டும் வராமலிருந்தால் அவர் இப்பொழுது நியுயோர்க் சிகிச்சை மனையில் இருப்பார்.

தமிழக முதல்வரின் நீரகமும் இயங்காமலிருந்தது பெரும் பிரச்னையைக் கிளப்பி விட்டது.

டாக்டர் பிரைட்மன்: தமிழக முதல்வர் ஒரு கட்டத்தில் சாவின் எல்லைக்கே சென்று விட்டார். ஆனாலும் இந்திய வைத்திய நிபுணர்களின் பெரும் ஆற்றலினுல் அவர் இப்பொழுது மறுவாழ்வு எடுத்திருக்கின்ருர்! இந்திய டாக்டர்களின் வைத்திய சேவையைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

### இந்திய வைத்திய நிபுணர் சிகிச்சை கண்டு பெருமிதம்!

'மூளையின் நடுப்பகுதியில் இரத்த உறைவு காணப்பட்டது, மற்றுமொரு பிரச்னையைத் தோற்றுவித்து விட்டது. ஏனென்ருல் இந்தப் பகுதியிலிருந்துதான் மூளையின் எல்லாப் பகுதிகளுக்கும்இரத்த விநியோகம் நடைபெறுகிறது.

'இரத்த உறைவினுல் குறிப்பிட்ட ஒரு பகுதி, பந்துமாதிரி ஊத ஆரம்பித்து விட்டது. இதுஒரு கட்டத்தில் 'டெனிஸ்' பந்து அளவுக்கு பெருத்து விட்டது! இப்பொழுது அளிக்கப்படும் சிகிச்சைகளினுல் அந்தப்பந்து சுருங்க வேண்டும் என்பது எமது நம்பிக்கை. மீண்டும் நல்ல நிலைமைக்கு முதல்வர் திரும்புவார் என்று எதிர்பார்க்கின்ருேம்.''

டாக்டர் ஜோன் மேயர்: நரம்பு மண்டலத் தாக்கத்துக்குச் சிகிச்சை அளிக்கவேண்டும் இதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. முதல்வரை இப்பொழுது அமெரிக்கா கொண்டுசெல்வது மிகவும் ஆபத்தானது பத்து நாட்களுக்குள் மூளையில் ஏற்பட்ட வீக்கம் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு இதன்பின்னர், அமெரிக்கப் பயணத்துக்கு அவர் தயாராகி விடுவார். இப்பொழுது அவரது வலது கையும், வலது காலும் சுகமடைந்துவருகிறது. தம்மைக்காண வருபவர்களையும் முதல்வரினுல் அடையாளம் காணக் கூடியதாக இருக்கிறது. இது ஒரு பெரிய மாற்றமாகும்.''

டாக்டர் பிரைட்மன்: உண்மையிலேயே நீரிழிவு நோய் வந்தால், சில நேரங்களில் சிறுநீரகம் இயங்காமலேபோய்விடுவதுண்டு. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் இருபத்து ஐந்துசத வீத சிறுநீரகக் கோளாறுக்காரர்கள் நீரிழிவு வியாதிக்காரர்கள் தான்.

''நீரிழிவு காரணமாக ஒரு நோயாளிக்குசிறுநீரகப்பிரச்னை ஏற்படுமானுல் அந்த நோயாளிக்கு இருதய மற்றும் மூளை சம்பந்தமான பிரச்னைகள் வருவது வழமையானதுதான். ஆனுல் முதல்வர் விஷயத்தில் மேலும் ஒரு பிரச்னை காணப்படுகிறது.

''சிறுநீரகம் இயங்காமலிருப்பதற்குக் காரணம்; கழிவுப் பொருள்களை சாதாரண முறையில் வெளியேற்றமுடியாமலிருக்கிறது.

''ஆகவே முதலில்; பத்து மணிநேரத்துக்கு இருதடவைகள் வீதம் விசேட சிகிச்சை முறைமூலம் கழிவுப் பொருள்களை வெளியேற்ற வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில், மிகவும் பக்குவமாக அதிவிசேட சிகிச்சை மூலம் இரத்தத்தைச் சுத்திகரிக்கவும் வேண்டும்.

''முதல்வர், கண்டத்திலிருந்து தப்பி விட்டார். இனி அவருக்குத் தேவையானது அமெரிக்க சிகிச்சை பின்னர் முறையான ஓய்வு, இன்னும் பத்து நாட்களில்' மாற்றுசிறுநீரக சிகிச்சைக்காக திரு ராமச்சந்திரன் புறாக்லின் செல்வார்,

''மாற்றுச் சிறு நீரகம் சென்னையில் வைத்தே முதல்வருக்குப் பொருத்தப்படாததற்குக் காரணம்; நீரிழிவு நோய்க்காரர்களுக்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படும் பொழுது முக்கியமாகத் தேவைப்படும்

**தொகுப்பு**
**கே. ஜி. எம்**

அதிமுக்கிய புதிய மருந்தான 'சைக்குளஸ்பொறைன்' அமெரிக்காவில் இருப்பதுதான்

''நாங்கள் சென்னைவந்து முதல்வருக்கு எதுவும் புதிதாகச் செய்யவில்லை. இந்திய வைத்திய நிபுணர்களின் சேவை மிகவும் பாராட்டத் தக்கது. 'அப்பலோ' ஆஸ்பத்திரியில் இந்திய வைத்திய நிபுணர்களினுல் எவ்விதமாக முதல்வரின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. என்பது கண்டு அதிசயப்பட்டோம்! இனிமேல் சென்னை -புறாக்லின் கூட்டுவைத்திய நிபுணர்களின் சேவைதான் தேவை

''மாற்றுக் சிறுநீரக சிச்சை வெற்றிகரமாக முடிந்ததும் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனை தமிழகத்துக்கு ஒப்படைப்போம். அவருக்குத் தொடர்ச்சியான வைத்தியமுறையும் பூரண ஓய்வையும் கொடுப்பது தமிழக வைத்திய நிபுணர்களையும், மக்களையும் பொறுத்த விஷயம்.

''முதல்வர் ராமச்சந்திரனுக்கு சிறு நீரகச் சிகிச்சை அளிக்கப்படும்பொழுது, பாதிப்புக்குள்ளான அவரது இரண்டு சிறுநீரகங்களுடன் மூன்ருவது சிறு நீரகமும் பொருத்தப்படுமே தவிர; இயங்க மறுத்த இரண்டு சிறுநீரகங்களும் சீர்குலைக்கப்பட மாட்டாது. சிகிச்சை, சுமார் இரண்டுமணி நேரம் வரை நடைபெறும். இதன் பின்னர் திரு. ராமச்சந்திரன் இருபது நாள் முதல் அறுபது நாள் வரை ஆஸ்பத்திரியிலிருக்க வேண்டும்.

''முதல்வருக்கு இப்பொழுது அறுபத்துஏழுவயதாகிறது. இந்த வயதில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவது நன்மை அளிக்குமா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. முப்பத்து ஐந்து வயதோ அல்லது அறுபத்து ஏழு வயதோ பிரச்னை அல்ல: ஆனுல், அறுபத்துஏழு வயதுள்ள ஒரு நோயாளிக்கு சிறு நீரக சிகிச்சையளிக்கப்படும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சை முறைதான் மிகவும் முக்கியமானது.''

## நமதுவிடுதலைப் பயணத்தை உலகறியச் செய்தவர்!

### எம்.ஜி. ஆருக்கு புகழ்மாலை

(சாவகச்சேரி)

''ஈழத் தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தை உலக விடுதலைப் போராட்டமாக மாற்றியபெருமை தமிழக உடன்பிறப்புக்களையும்- விசேடமாக தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனையேசாரும்''.

மேற்கண்டவாறு கைதடி அகதிகள் முகாமில் நடைபெற்று முடிவுற்ற. தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சுகநலம்பேணி ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணுவிரதத்தின்போது முகாமின் முகாமையாளரும் - அறவழிப் போராட்டக்குழுவின் முக்கிய தலைவருமான திரு. வீ. எஸ். துரைராஜா தெரிவித்தார்.

நவபுரம் திரு. ச. தங்கராசாவின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இவ் உண்ணுவிரதத்தில் சுமார் 75 பேர் பங்குகொண்டிருந்தனர். திரு. வீ. எஸ். துரைராஜா மேலும் கூறியதாவது:

''அண்மைக்காலத்தில் தமிழ்ப்பேசும் மக்களுக்கு ஏற்பட்ட அட்டூழியங்கள், அநியாயங்கள், பேரிழப்புகளுக்கெல்லாம் தமிழகத்தில் வாழ்கின்ற எமது உடன் பிறப்புக்கள் எதிர்ப்புத் தெரிவுக்கின்ற வகையிலே அங்கே அடையாள உண்ணுவிரதங்களையும் போராட்டங்களையும் நடாத்தியதன் மூலம், ஈழத் தமிழர்களுடைய போராட்டங்களை உலக விடுதலைப்போராட்டமாக மாற்றத்தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பெரும் முயற்சிகள் மேற்கொண்டார் என்ருர்.

உண்ணுவிரத நிகழ்ச்சியினை ஏற்பாடுசெய்திருந்த நவபுரம் ச. தங்கராசா உரையாற்றுகையில் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனின் வாழ்வு ஒரு சாதாரண வாழ்வு அல்ல. சாதாரணமாக இலங்கையிலே பிறந்து இந்தியாவிலேவாழ்ந்து கொண்டிருக்கின்ற அவர்சாதாரண மனிதன் என்றும் நாம் கூறிவிட முடியாது. உலகத்தில் சாதனைகள் பல நிகழ்த்திய பெருமனிதன். கடமை-கண்ணியம் - கட்டுப்பாடு போன்ற அறிஞர் அண்ணுவின் தத்துவங்களைப் பின்பற்றி புனித லட்சியத்துடன் செயலாற்றி வருகிருர்என்ருர்.

[7-ம் பக்கம் பார்க்க]

## ''பஸ்சேவையை புனரமைக்க எனதுகல்விச்சுற்றுலாஉதவும்

### பிரிட்டன் சென்றுள்ள வ. பி. போ. ச. தலைவர் கருத்து

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் இரண்டரை மாத காலம் போக்குவரத்து சம்பந்தமாக கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ளார் தமது விஜயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

''1981ம் ஆண்டு வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர்'' பதவியை ஏற்ற பின்பு எமது வரலாற்றில் என்றும் கண்டிராத பிரச்னைகளை எமது சபை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டபோதும் பொதுமக்களின் ஆதரவும், ஊழியரது ஒத்துழைப்பும் இப் பிரச்னைகளை உறுதியோடு எதிர்நோக்க எனக்குப் பக்கபலமாக அமைந்தது. குறிப்பக அண்மையில் பருத்தித்துறை, காரைநகர்ச் சாலைகள் மூடப்பட்டபோது அப்பகுதி பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச- கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும், எமது ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களை நினைவு கூர்ந்து நான் அடைந்த வேதனை சொல்லுந்தரமன்று. எனினும், இறைவன் திருவருளாலும், பொதுமக்களின் பிரார்த்தனைகளாலும், அவர்களின் வேண்டுதலாலும், எமது ஊழியரது தன்னலமற்ற சேவையாலும், இச் சாலைகளை மீண்டும் திறக்க வாய்ப்புக் கிடைத்தது. இச் சாலைகள் மீண்டும் இயங்க ஆரம்பித்த பின்னர் பஸ் சேவைகள் ஓரளவு சீரடைந்ததுடன், எமது வருவாயும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

''மேலும் இச் சேவைகள் சிறப்படைந்து செயலாற்ற பொதுமக்களும், பொதுமக்கள் மத்தியிலுள்ள இயக்கங்களும், எனக்குப் பதிலாக கடமை புரியபரும் திரு. கே. ஆர். வேலுப்பிள்ளை அவர்களுக்கும், எனது சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் மனப்பூர்வமகன ஒத்துழைப்பை நல்குவார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

''நான் இக்கல்விச் சுற்றுலாவின் போது எனக்குக் கிடைக்கக் கூடிய அனுபவங்கள், எமது சேவைகளை மேலும் புனரமைப்புச் செய்வதற்கு உதவியாக அமையும் என நம்புகிறேன்.''

## தொலைபேசி சீர்கேடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பகுதியில் தொலைபேசிச்சேவை அடிக்கடி சீர்கேடு அடைந்துவருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு தபால் நிலையத்தில் அமைந்துள்ள தன்னியக்க தொலைபேசிப்பரிவர்த்தனை நிலையம் சீராக இயங்காததே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவசர தேவைகளுக்குகூட தங்கள் தொலைபேசியை பயன்படுத்த முடியாது இருப்பதாக இப்பகுதி தொலைபேசி பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலுள்ளவர்களின்

# ஆலோசனையை புறக்கணித்து தொழிற்சாலை அமைத்தேன்!

## நாவற்குழி 'அன்றீஸ்' அதிபர் கருத்து

(சாவகச்சேரி நிருபர் க. ஜீவகதாஸ்)

''அன்றீஸ் அன் கம்பனியை 1981ம் ஆண்டு இங்கு நிறுவ நான் முயற்சித்த சமயம், கொழும்பிலுள்ள பல முக்கிய பிரமுகர்கள் இக்கம்பனியை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிறுவவேண்டாம் என ஆலோசனை வழங்கினர். அப்படியிருந்தும்கூட, இப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் நம்பிக்கை, திறமை விசுவாச உணர்வு ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டே இந்நிறுவனத்தினை, பலகோடி ரூபாய் மூலதனமிட்டு நிறுவியுள்ளேன்''

இவ்வாறு நாவற்குளி அன்றீஸ் அன் கம்பனியின் உரிமையாளரும் இலங்கையின் பிரபல கடல் உணவு ஏற்றுமதியாளருமான திரு. ஈ. எம். அன்ட்றீஸ் அண்மையில் மேற்படி கம்பனியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:- ''சில தினங்களுக்கு முன்னர் கம்பனியின் காரியாலயத்தில் துப்பாக்கி முனையில் பணம் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் மிகவும் வேதனைக்குரியது. இக்கம்பனியின் வளர்ச்சிக்காக விசுவாச உணர்வுடன் பணியாற்றுகின்ற 500 க்கு மேலான தொழிலாளர்களின் வாழ்க்கையுடன் விளையாடுகின்ற செயல் போல உள்ளது.

''இதுவரை இக்கம்பனியில் 1கோடியே 30லட்சம் ரூபாவை முதலீடு செய்துள்ளோம். அவ்வாறு போடப்பட்ட மூலதனம் வளர்ச்சியடைந்து, கம்பனியில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் கம்பனிக்கு ஒழுங்காக, இறால் விநியோகம் செய்பவர்களுக்கும் பெரும் நன்மையளித்து வருகின்றது'' என்றார்

''கடந்த நான்கு மாதங்களுக்குள் மட்டும் சுமார் 40 லட்சம் ரூபாவை முதலிட்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வருவதாகவும் கூறிய அவர் 1982-ம் ஆண்டு வெளிநாடுகளுக்கு ஆகக்கூடுதலான கடல் உணவு வகைகளை ஏற்றுமதி செய்தமைக்காக ஜனாதிபதியின் பரிசாகக் கிடைத்த 1 லட்சம் ரூபாவையும் இங்கு பணியாற்றுகின்ற சகல தொழிலாளர்களுக்குமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது'' என்றார்.

## ''உற்பத்தியைப் பெருக்கி உணவுப் பிரச்னையைத் தீர்ப்போம்''

(உடுவில்)

'ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு, விவசாய ஸ்தாபனம், வளர்ந்து வரும் நாடுகளிடையே விவசாய உற்பத்தியை பெருக்கி, நெருக்கடியான உணவுப் பிரச்சனையை தீர்த்துக்கொள்வதற்கு உதவியளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டதே உலக உணவு நாளாகும். இவ்வுலக உணவு நாளிலே, உணவுப் பிரச்சனையின் தன்மைகளையும், பரப்பினையும் மக்கள் உணர்ந்து கொள்ளவும் மக்கள் மத்தியில் பசி, பட்டினி, ஊட்டக் குறைவு, வறுமை ஆகியவற்றை அழித்து தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நோக்குடன் இத்தினம் உலகம் எங்கும் கொண்டாடப்படுகிறது. இத் தினத்தில் மாணவராகிய நீங்கள் மரம் நாட்டுதல், கட்டுரைகள் எழுதல், பேச்சுக்களை நடாத்தல் போன்ற நற்பணிகளில் ஈடுபடுதல் அவசியம்.''

உலக உணவு தினத்தை கொண்டாடும்முகமாக நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உணவினதும் ஊட்டத்தினதும் முக்கியத்துவம் பற்றி உரையாற்றிய வித்தியாலய புதிய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை ஆசிரியர் திரு பொ. தி. சம்பந்தபிள்ளையும் உரையாற்றினார்.

மாணவர் மத்தியில் உணவு தினம் பற்றிய கட்டுரைப் போட்டியும் நடாத்தப்பட்டது.

# "பாடசாலைகளில் நூலகங்கள் அத்தியாவசியமானது"

## நூலகக் கட்டிடவிழாவில் கருத்து

[புங்குடுதீவு]

''நூலகங்கள் பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக விளங்குகின்றன. அவற்றை அமைப்பதில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் தீவிரகவனம் செலுத்தவேண்டும். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியவல்ல நூலகங்களை உருவாக்கவும், நன்முறையில் பேணிக்காக்கவும் நாம் தவறக்கூடாது இவ்வித்தியாலயத்தின் நீண்டகாலத் தேவையொன்று இன்று நிறைவெய்தியுள்ளமை குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். இதனை உருவாக்க இவ்வித்தியாலய அதிபரும், ஆசிரியர்களும், நலன் விரும்பிகளும் மேற்கொண்ட பணிகள் பாராட்டிற்குரியன''

யாழ் கல்விப் பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளை புங்குடுதீவு ஸ்ரீகணேசமகா வித்தியாலயத்தின் புதிய நூலகக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. குகதாசன் இத்திறப்பு விழாவுக்குத் தலைமைவகித்தார். திருமதி தையல்நாயகி கதிரவேலு மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தார்.

வித்தியாலய அதிபர் திரு த. துரைசிங்கம் எழுதிய 'எங்கள் வித்தியாலயம்' என்னும் நூல் இவ்விழாவில் வெளியிட்டுவைக்கப்பட்டது. முன்னைநாள் அதிபர் திரு நா கார்த்திகேசு இந்நூல் வெளியீட்டுரையினை நிகழ்த்தினார். டாக்டர் சி.கணேஷ் நூலின் முதற் பிரதியைப் பெற்றார்.

நூலகக் கட்டடத்தை அமைத்துக்கொடுத்த வர்த்தகர் திரு. நா. சுப்பிரமணியத்திற்கு இவ்விழாவில் பாராட்டளிக்கப்பட்டது. அவரது இப்பணியினைப் பாராட்டி வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். ஈற்றில் ஆசிரியர் திரு. பொ, சபாரத்தினம் நன்றி கூறினார்.

## இந்து சமயக் கருத்தரங்கு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் குழுக்களுக்கான இரண்டாவது சமயக்கருத்தரங்கு திருநெல்வேலியில் நடைபெற்றது.

'நாட்டில் இந்து சமயத்தின் தத்துவத்தையும், அதன் புனிதத் தன்மைகளையும் இந்து சமயத்திலிருந்து மக்கள் பெறக்கூடிய பலாபலன்களையும் உணரக் கூடிய சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் அதுவே உண்மையான இந்து சமுதாயமாகும்'' என்று மேற்படி கருத்தரங்கில் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு கருத்துரையாற்றிய யாழ். மாவட்ட வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. மகேசன் தெரிவித்தார்.

## இந்திரா

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

மந்திரி பின்னர் குறிப்பிட்ட போது, தம்மை மாத்திரமின்றி தம்முடனிருந்த தமது முக்கியசெயலாளர்டாக்டர் பி. சி. அலக்சான்டர் ஜி பார்த்தசாரதி ஆகியவர்களையும்அடையாளம் கண்டு கொண்டார் என்றார்.

எம் ஜி.ஆர். துணிச்சல்மிக்க மனிதர் கஷ்டமான நிலைமைகளை எல்லாம் எதிர்கொண்டு சமாளித்துள்ளார். இப்போதைய நெருக்கடியையும் அவர் சமாளித்து விடுவார் என தாம் எம்.ஜி ஆரிடம் கூறியதாகவும் பிரதமர் சொன்னார்.

முதல்வரைச் சந்தித்தபின் அடுத்த அறையில் மருத்துவ நிபுணர்களைச் சந்தித்தார். முதல்வருக்கு ஏற்பட்டுள்ள சுகவீனம், மற்றும் அவருக்களிக்கப்படும் சிகிச்சைகள் பற்றியெல்லாம் பிரதமர் அறிந்து கொண்டார்.

பாராளுமன்ற தேர்தல்களுடன் மாநில தேர்தலையும் நடத்துவது பற்றியகோரிக்கைபற்றி நிருபர்கள் கேட்டபோது இந்த விஜயம் அரசியல் சார்பானதுமல்ல தேர்தலைப்பற்றி பேசக்கூடிய நேரமுமில்லை'' என்று பிரதமர் பளிச்சென்று பதிலளித்தார்.

## நமது...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

குடிபெயர்ந்தோர் அபிவிருத்திப் பேரவைச் செயலாளர் திரு. ஆ. இராஜலிங்கம் திரு. க. சுபாஸ்கரன் ஆகியோரும் உரையாற்றினர். உண்ணாவிரத முடிவில் உண்ணாவிரதிகளுக்கு குளிர்ப்பானம் வழங்கப்பட்டது.

# தினமும் 125 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். கடவுச் சீட்டு அலுவலகத்தில் தினமும் 125 விண்ணப்பங்கள் கையளிக்கப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் ரூ. 50 ரூ. 100 பெறுமதியான முத்திரைகள் தபாலகங்களில் கிடைக்காததினால் 10ரூ., 20ரூ, முத்திரைகளையே விண்ணப்பத்தில் ஒட்டி கையெழுத்திடுகின்றனர்.

அதேநேரத்தில் யாழ். அரச செயலகத்தில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் முடிந்துவிட்டதால், வெளியில் உள்ள சில கடைகளில் 5 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகின்றது,

## இப்படியும் விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறப்பு இறப்புபெரும் பகுதி பதிவுகாரர் காரியாலயத்தில் பிறப்பு, இறப்பு திருமண சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் படிவங்கள் முடிவடைந்து விட்டதால் தினமும் நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் வெள்ளைத் தாள்களில் கையால் எழுதியே தமது விண்ணப்பங்களை அக்காரியாலயத்தில்ஒப்படைக்கின்றனர்.

## இன்றைய பலன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

விருச்சிகம்: சிந்தனைக்கணைகள் தாக்கும் சீறிவரும் கோபம் உடன்பிறந்த சகோதரத்தின் உடல் நிலையும் கவலையைத்தரும்.

தனுசு: நீண்டநாள் பிரச்சினைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு.

மகரம்; புத்திர வழியால் புகழுண்டு. புதிய பாதையில் நடைபோடுவீர்கள். நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும்.

கும்பம்; முன்னேற்றப் பாதையில் தடைகள் பலதாக்கும், இருள்படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வரும். மின்னியல் பகுதியில் கடமையாற்றுவோர் அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும்.

மீனம்: காதலர்களுக்கு கற்கண்டானதினம், குடும்பத்தில் குதூகலம் தென்படும், உறவினர்களின் ஆதரவும் பெற்றோர்களின் ஆசியும் தப்யாமல் கிட்டும், களஸ்திரவழிபால் சுகமுண்டு.

திருமலை
வே.ரவீந்திரன்

# முடிச்சுமாறிகள், மோசடிக்கும்பல்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

முடிச்சு மாறிகளினதும் ஏமாற்றிப் பணம் பறிக்கும் மோசடிக் காரர்களினதும் நடமாட்டம் யாழ். குடாநாட்டில் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது.

### 10 ஆயிரம் இழந்தார்

புகையிலை வியாபாரி ஒருவர் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது புகையிலை விற்றுப் பெற்ற 10 ஆயிரம் ரூபாவை இழந்து அதிர்ச்சிக்குள்ளானார்.

மிருசுவிலைச் சேர்ந்த வீ. கந்தையா (84 வயது) என்ற திடகாத்திரமுள்ள வயோதிபருக்கே இக்கதி நேரிட்டது.

கொக்குவிலில் உள்ள ஒருவருக்குப் புகையிலை விற்ற பணமான 10 ஆயிரம் ரூபாவையும் பெற்று மடிலேஞ்சியால்கட்டி வேட்டி மடிப்புக்குள் வைத்துக் கொண்டாராம்.

அளவெட்டி அம்பனையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ்ஸிலேயே தாம் ஏறியதாகக் கவலையுடன் தெரிவிக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இறங்கி மிருசுவில் செல்வதற்காக நின்று கொண்டிருந்த பொழுது தமது மடியைத் தடவிப் பார்த்த பொழுது பணம் சுற்றி வைத்திருந்த 'மடிலேஞ்சி'யைக் காணாது திகிலடைந்தாராம்.

மினிபஸ்ஸில் தான் பிரயாணம் செய்த பொழுது பணம் அபேஸாகியிருக்க வேண்டும் என்று அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

கல்வியன் காட்டைச் சேர்ந்த பொ. வன்னியசிங்கம் (52 வயது)என்பவரிடம் இனம் தெரியாத ஒருநபர் நயவஞ்சகமாக நடித்து 750 ரூபாவைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகி விட்டாராம்.

'டிப்டொப்'பாக உவிடயணிந்து சென்ற அந்த நபர் சவூதி அரேபியாவிலிருக்கும் உங்கள் மகன் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று தனது சகோதரர் மூலம் கொடுத்தனுப்பியிருந்ததாகவும் அதற்கு வரிப்பணமாக 750 ரூபா செலுத்தியிருப்பதாகவும் சுன்னாகத்திலுள்ள வீட்டில் இருக்கும் அப்பெட்டியை எடுத்துச் செல்லுமாறும் விநயமாக வன்னியசிங்கம் என்பவரிடம் சொன்னாராம்.

அந்தநபர் சொன்னவற்றை நம்பிய வீட்டுக்காரர் 750 ரூபாவையும் கொடுத்துவிட்டு, சுன்னாகம்வரை அவருடன் பஸ்ஸில் சென்றதாகவும் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருவரும் இறங்கியதும் சைக்கிள் எடுத்துவருகின்றேன் நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு தலைமறைவாகிவிட்டாராம்.

''உண்மையில் தமது மகன் சவூதியில் வேலையாக இருக்கிறார் என்றும், ஆனால் தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றை அவர் அனுப்பி வைக்கவில்லை என்றும், தம்மை நம்பவைத்து 750 ரூபாவையும் மோசடி செய்துவிட்டாரென்றும் அழாக்குறையாக' வீட்டுக்காரர் சொன்னார். (மா)

## தீபாவளிக்கு முற்பணம்

(சாவகச்சேரி)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு 2, 72, 000 ரூபாவை மரக்கடன் முற்பணமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன

இதற்கான அங்கீகாரத்தினை கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு எஸ்.வேலாயுதபிள்ளை வழங்கியுள்ளார்.

★ எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள் ★

# யாழ்ப்பாணத்தில் ★ ★ ★ பாரிய மருந்துக்களஞ்சியம்.

- ★ உள்நாட்டு வெளிநாட்டு மருந்துவகைகள் இறக்குமதியாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், விநியோகஸ்தர்கள்,
- ★ வைத்திய உபகரணங்கள். ★ பாலுணவுப் பொருட்கள்.
- ★ தகரத்திலடைக்கப்பட்ட உணவுவகைகள்.

அனைத்துக்கும் . . . . . . . . . . . . .

## ● மொத்த சில்லறை வியாபாரிகள் ●

பின்வரும் உற்பத்திப் பொருட்களுக்கு நாமே வடபிராந்திய விற்பனையாளர்கள்.

- ★ பைசர் லிமிட்டெட். ... ... ... ... (PFIZER LTD)
- ★ அரச மருந்துக் கூட்டுத்தாபனம் ... (STATE PHARMACEUTICALS CORPORATION)
- ★ சிலோன் நியுறிசனல் Fபூட்ஸ் லிமிட்டெட் .. (CEYLON NUTRITIONAL FOODS LTD.)
- ★ ஹேஸ்ட் (சிலோன்) லிமிட்டெட் ... ... (HOECHST CEYLON CO., LTD.)
- ★ லங்கா மில்க் பூட்ஸ் (சி. டபிள்யு. ஈ.) லிமிட்டெட் ... (LANKA MILK FOODS LTD.)
- ★ மல்லர் அன் பிப்ஸ் (சிலோன்) லிமிட்டெட் ... (MULLER AND PHIPPS CEYLON LTD.)
- ★ வயத் இன்ரநாஷனல் லிமிட்டெட் ... ... (WYETH INTERNATIONAL LTD.)
- ★ சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட் ... ... (CEYLON COLD STORES)
- ★ இன்றநாஷனல் பார்மா (பிரைவேற்) லிமிட்டெட் ... (INTERNATIONAL PHARMA (PVT) LTD.)

## உணவுக்கு சுவையூட்டும் மரக்கறி எண்ணெய்
## VEGETABLE OIL




அளவு மீறிய உழைப்பு
அல்லது
துன்பத்திற்குப் பிறகு
மீண்டும் உடல்நலம் பெறுவதை
துரிதப்படுத்துவதற்கு

## பிராண்ட்ஸ் கோழி எஸன்ஸ்
(Brand's Essence of Chicken)




என்பவற்றை நாமே இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறோம்.

கொஞ்சும் குழந்தை முதல் வயதுவந்தோர் அனைவரும் விரும்பிச் சுவைக்கும் **பிறிமா பாண்** (PRIMA BREAD) யாழ்ப்பாணத்தில் எம்மிடம் கிடைக்கிறது.

# சிற்றி மெடிக்கல்ஸ்

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24191, 24192.

# CITY MEDICALS
Phone: 24191—92. JAFFNA.

கிளை ஸ்தாபனம்:
## செறில்ஸ் CHERRYL'S
436, 438, 440, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24194.

## தீபாவளி

மாலை

5-30 சிறுவர் நிகழ்ச்சி
6-00 சிங்கள நிகழ்ச்சி
6-30 'நான் உங்கள் தோழன்' தமிழ்திரைப்பட தொடர்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-45 ஆங்கில நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 ஆங்கில நிகழ்ச்சி தொடரும்
9-00 நகைச்சுவைத்தொடர் நிகழ்ச்சி
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 தீபாவளி விசேட நிகழ்ச்சி
10-30 உலகச்செய்திகள்
10-35 விசேட தீபாவளி நிகழ்ச்சி தொடரும்
11-00 ஒளிபரப்பு முடிவு

# நவீன ஜப்பான்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானிய தொழில் அபிவிருத்தி, அதன் பொருளாதார வளர்ச்சி, இரண்டாவது உலக மகாயுத்தத்தின்பின் நாடு கண்ட மாற்றங்கள் இன்றைய உலகின் பேரதிசயங்களில் ஒன்று

பழைய தொழில் முறைகள் பெரும்பாலும் அகற்றப்பட்டு புதிய அமைப்பே நாடு முழுவதையும் அலங்கரிக்கின்றது.

அழிவில் எழுந்த ஆக்கம் என்று இந்த முறையை வர்ணிப்பது பொருத்தமாகும்.

இந்த பொருளாதார அதிசய ஆக்கம் தங்குதடையின்றி வளர்ந்து கொண்டு போகுமா?

இதுவே நாம் ஆராயும் கேள்வியாகும்.

தொழில் நுட்பம் எல்லாத் துறைகளிலும் பெரும்வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

போரால் விளைந்த கெடுதிகள் அகற்றப்பட்டன. இயற்கையின் கொடுமைகள் பெருமளவிற்குநீக்கப்பட்டன. மருத்துவம் சுகாதாரம் பெருவிருத்தியடைந்துவிட்டன. நீண்ட வாழ்வு உறுதியாய் விட்டது. பொதுநலசேவைகள் பெருகிவிட்டன. இவையெல்லாம் இன்றைய செழிப்பில் தேசத்தின் மகிமையைப் பறைசாற்றுகின்றன, இது மணப்பறையென்ருல், பிணப் பறைக்கு வித்து இதிலே க்காணப்படுவதாக சமுதாய ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

முன்னோர் வாழ்ந்த வறுமை வாழ்வு- போர்க் காலத்தின் பேரழிவு. அதனுல் மக்களுக்கேற்பட்ட நீண்டகால இடர்சுள், -இவையாவும் இனிவரும் சந்ததியாரைவதைக்காதவாறு இன்றை செல்வ வாழ்வு தொடரவேண்டுமென்பதே பெற்ருேரின் பெருநோக்கம்.

செல்வமும், சமத்துவவாழ்வு வாழும் ஜனநாயக சமுதாயமுமே பொதுமக்கள் விரும்பும் லட்சியம்.

இதற்கு அடிப்படையான ஜப்பானிய பெற்ருேரின் உழைப்பு மிகுந்த வாழ்வு இன்றைய இளைஞரைக்கவரவில்லை.

### பரம்பரை இடைவெளி

சமத்துவமாக வாழவிரும்பும், இளைஞர் தம்முடைய பெற்ருேரைப்போல கடின உழைப்பில் காதல் கொண்டவர்களல்ல.

உலகில் தாம் தனிப்பட்ட இடம்எடுக்கவேண்டுமென்ருே, தங்கள் நாடுசெல்வத்தில் தனித்துவமாகத் திகழவேண்டும் என்ருே இன்றைய ஜப்பானிய இளைஞர் கூட்டம் விரும்பவில்லை.

இதன்விளைவாக இரண்டு முரண்பட்டபிரிவுகள் இளைஞர் மத்தியில் உருவாகின்றன.

ஒன்று பழமையில் நம்பிக்கை கொண்டு மரபுமுறைக் கல்வியைத் துணைகொண்டு, சொகுசு வாழ்வை நாடும் சிறுபான்மையர். உயர்பதவிகளை வகிக்க விரும்பும் கூட்டத்தினர் இவர்கள்.

மற்றது எவ்வித உழைப்புமின்றி, உழைப்பில் நம்பிக்கையின்றி இன்றைய செல்ல வாழ்வில் காலம் போக்கும் சோம்பேறிகள்.

இவ்விரு சிறுபான்மைக் குழுவினர் பெரும்பான்மை இளைஞரின் முற்போக்குடைய, துணிவான செயல்திட்டங்களுக்கு தடையாகின்றனர்.

வீழ்ச்சிக்கு இது ஒருஅறிகுறியானுலும் என்றும் விழுந்தெழும்பும் சக்தியுடைய ஜப்பான் பள்ளத்தை நாடினுலும் உயர முடியுமென்று நம்பலாம்

ஆதாரம்: 'நியூஸ்வீக்'

## கொக்குவில் இந்து வெற்றி:

# பிரகலாதன் 2 கோல்கள் போட்டார்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்து 'பி' பிரிவில் மகத்தான வெற்றியீட்டியுள்ளது.

கொக்குவில் இந்துவைச் சேர்ந்த இளைஞர்களான பொ. பிரகலாதன் இரண்டு கோல்களையும், என். நற்குணேந்திரன் ஒரு கோலை போட்டனர். மேற்படி பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## மனையிருள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பகவானின் வெற்றிக்காக பாணங்களைத் தொடுத்தாள்.

சத்திய பாமாவின் பாணங்களினுல் நரகாசுரன் சோர்வடைந்தான். அவன், சோர்வு நீங்கி மீண்டும் போரிட்டான். அது கண்ட கிருஷ்ணண பகவான் தனது சக்கர ஆயுதத்தை ஏவிவிட்டார். உடல் பிளந்தது.

இறக்கும் தறுவாயில் 'பகவானே என்னை மன்னித்துவிடு. எனது ஆணவத்தால் நனே புரிந்த கொடுமைகளை மன்னித்துவிடு என்று இறைஞ்சினுன். தர்மத்தின் காவலனுன பகவான் புன்முறுவல் பூத்தார். நாததழதழக்க ஐயனே, நான் கேட்கும் வரத்தை ஈவாயாக என வேண்டினுன்.

பகவானே இக்கொடியவன் இறக்கும் நாளை, மனையிருள் போக்கி மன இருளை அகற்றும் மங்களமான நாளாகக் கொண்டாட வேண்டுமென வேண்டினுன். அப்படியே ஆகுக என பகவான் அருள்புரிந்தார்

கிருஷ்ணபகவானின் அனுக்கிரகம் பெற்ற நரகாசுரன் பரமபதம் சேர்ந்த நன்னுளே தீபாவளித் திருநாளாகும். தீபாவனி தினத்தில் நீராடி, கோடியுடுத்து, ஆலய தரிசனம் செய்து, தானதருமம் செய்வதுநலம்.


இன்றைய தீபாவளி நன்னுளிலே
சங்கற்பம் செய்வோம்

உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
உள்ளூர் உற்பத்திகளுக்கு
ஆதரவு கொடுப்போம்.




மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும்
ஆதரவு நாட்டின் நற்பணிக்கே,

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிரும்.

ஜெயலதா
ஜுவல்லர்ஸ்,

337 (147) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (368)

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்!

இதோ!
"காமதேனு"

சுத்திகரிக்கப்பட்ட பால்—பைக்கெட்டுகளில்!!
குழந்தைகளுக்கும்! முதிர்ந்தவர்களுக்கும்!!

★ இலகுவில் செமிக்கக்கூடியது
★ அதிக போஷாக்குள்ளது
★ சகல தேவைகளுக்குமுகந்தது
★ இலகுவில் கிடைக்கக்கூடியது
★ மாப்பொருட்களைவிட மிகச்சிறந்தது
★ பத்து நாட்கள் வரை பழுதடையாமல் வைக்கக்கூடியது

என்ற உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றது
மற்றும் ★ லோக்கட் ★ சுவையூட்டிய பால்
★ தயிர் ★ நெய் யாவும்
எமது பகுதி உற்பத்திப் பொருட்களே
மறந்துவிடாதீர்கள்!!

உங்கள் ஒத்துழைப்பை நல்கி
ஊக்கமளிக்க வாரீர்!!

பாற் தொழிற்சாலை
கிளிநொச்சி. (366)

கே. ரி. எம். டுவர்ஸ்

மிகவும் சொகுசான, சௌகரியமான உறங்கலிருக்கை
வசதியுள்ள
இரவு—பகல் பிரயாண சொகுசு சேவை
இன்றுவரை மனமுவந்து அளித்த ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
கே. ரி. எம். டுவர்ஸ் ஸ்தாபனத்தார்
பெருமையுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன்
தீபாவளி
நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிருர்கள்.
டிக்கட் பதிவுசெய்யுமிடங்கள்:
யாழ்ப்பாணத்தில்:

1. குமரன் டெக்ஸ்டைல்
148, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24003, 23736

2. லிங்கம் ஸ்டோர்ஸ்
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23576

3. வனஜா ரெக்ஸ்ரைல்ஸ்
144, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24390

4. ஆ. பி. (R.B.) புக்கிங் சென்ரர்
2-வது கட்டிடம், நவீன சந்தை,
மத்திய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24003

5. ஸ்ரீமகள் றேடேர்ஸ்
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23572

கொழும்பில்:

1. அஜந்தா ஹோட்டல் லிமிட்.,
125, ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு-11.
தொலைபேசி: 28089, 32769

2. ரஞ்சன் றவல் சென்ரர்
139, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு-13
போன்: 35340

3. கோமதி விலாஸ்
142, செட்டித் தெரு,
கொழும்பு-11.
போன்: 34144

மேலதிக விபரங்களுக்கு:
K. T. M. TOURS
148, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24003—23736

ஓட்டோ பிறின்ற் 122, சென்றல் வீதி, கொழும்பு
போன்: 33351. (376)

# அகில இலங்கை தமிழ்த்தினப்போட்டி: மாவட்டரீதியில் தெரிவானோர்

(கொழும்புத்துறை)

அகில இலங்கைத் தமிழ்த் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே மாவட்ட ரீதியிலான இறுதிப்போட்டிகள் யாழ், இந்து மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்டன. இப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் அகில இலங்கைப் போட்டிக்குத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்

யாழ் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள இப்போட்டி முடிவுகள் வருமாறு:- [3-4] வாசிப்பு-செல்வி சோ. நிரஞ்சனு [யாழ். இந்து ஆ ர ம் ப பா ட சா லை], செல்வி செ. சாரதா [உடுவில் மகளிர் கல்லூரி], செல்வி அ. நிசாந்தினி [பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி], '1' எழுத்து செல்விசெ ததட்சாயினி புனித ஜோன் பொஸ்கோ வித்தி], செல்வி தி வதனு [வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை) செல்வி சி. ஜெயந்தினி [சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை], '1' ஆக்கம் ·செல்வி த. தட்சாயினி [புனித ஜோன் பொஸ்கோ],செல்வி இ.பிரேமலதா [வட்டுக்கோட்டை திரு ஞானசம்பந்த வித்தியாசாலை], செல்வி ச. சசிகலா [நயினுதீவு ஸ்ரீந கபூசணி வித்தியாசாலை], பாஓதல் - பா. தவராசா [கைதடி நாவற்குழி அ. த. க. பா.] ம ரூே. பி விமலேந்திரன் [பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி], செல்வி ஸ்ரீலக்சுமி [வேலணை சரஸ்வதி வித்தியாசாலை]

[5-6] வாசிப்பு;- செல்வி பா. பாலகி [வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை]செல்வி ச. சாந்தலோஜினி [மல்லாகம் மகளிர் வித்தியாலயம்], செல்வி இ.மில்கா [உடுப்பிட்டி மக்ளிர் கல்லூரி], எழுத்து;- செல்வி ம நெய்த்திரா [யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம்], செல்வி பா. பாலகி [வேலணை. சைவப்பிரகாச வித்தியாசாலை], செல்வி பா. தாரணி [நுணுவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தியாலயம்], ஆக்சம்:- செல்வி க. ஜெயராதா [யாழ். கன்னியர் மடம் ம வி.], செல்வி பே. குகப்பிரியா [இளையதம்பி இந்து த. க. பாடசாலை], செல்வி க. ஜெயந்தினி [வீமன் காமம் மகாவித்தியாலயம்], இ. கஜானன் [கரம்பொன் சண்முகநாத ம. வி], பாஓதல்;- வை. யாதவன் [பரி. யோவான் கல்லூரி], செல்வி சு. கீதாஞ்சலி [வீமன் காமன் ம வி.] செல்வி ந. வாசுகி [இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை]

(7-8) கட்டுரை: செல்வி பி. மெலானி பார்பரு (ஊர்காவற்றுறை · புனித மரியாள் பெண் பாடசாலை), செல்வி ஸ்ரீசாந்தினி (சுன்னுகம் இராமநாதன் கல்லூரி), செல்வி செ. மேரி அனந் பிராண்டா (புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்), ஆக்கம்: செல்வி சே. சுனிதா (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்), செல்வி ரி. சந்திரிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), செல்வி பிரான்சிஸ் (ஊர்காவற்றுறை புனித மரியாள் பாடசாலை), பேச்சு; பா.கேதீஸ்வரரூபன் (யாழ். இந்துக்கல்லூரி), செல்வி தி. திருத்தேவி (இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), செல்வி ஸ்ரீ.அனுஷா (மானிப் பாய்மகளிர்கல்லூரி).பாஓதல்: செல்வி ப.சுஜாதா (யாழ். இந்துமகளிர் கல்லூரி), செல்வி ச. நளினி (தெல்லிப்பழை மகாஜன கல்லூரி), செல்வி யோ. நந்தினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

(9-10) கட்டுரை: செல்வி தெ. துஷ்யந்தி, (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) செல்வி த. பத்மசுகி [புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய ம ளிர் வித்தியாலயம்), செல்வி பொ.சுமதி யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஆக்கம்; செல்வி ந. சுசீலா பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலயம்), ப.கணேஷ் (சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம ம. வி ), செல்வி க.யசோதா (அச்சுவேலி ம. ம. வி.), பேச்சு: வை. சு. சர்வானந்தர் (யாழ்ப்பாணக்கல்லூரி செல்வி ம லுட்வின் கிரஸ்ரா (ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண் பாடசாலை), பாஓதல்; செல்வி சி சிவகெங்கா (சுன்னுகம் இராமநாதன் கல்லூரி), செல்வி மு. ஜெயகௌரி (மகாஜனக் கல்லூரி), செல்வி சு.இராதிகா (நாவற்குழி ம. வி )

நாடகம்:- பரியோவான் கல்லூரி (நரகத்தில் இடர்ப்பபடோம்), வீமன் காமம் மகா வித்தியாலயம் (சிவ சின்னங்களின் மகிமை), நாவற்குளி ம. வி. (சிறை இருந்த சீதை) சிறந்த நடிகர்கள்:- தி அசோகன் (பரியோவான் கல்லூரி, செல்வி மு. மாலினி(சுன்னுகம் இராமநாதன் கல்லூரி)செல்வி க அமிர்தாஞ்சினி [வீமன் காமம் ம. வி], சிறுகதை சி. மகிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), சு.வரதன் (நயினுதீவு ம வி) செல்வி சி. வாசுகி (யாழ்ப்பாணக் கல்லூரி)

## சுய தொழில் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

திட்டமிடல் அமைச்சின் ஆதரவுடன் யாழ் மாவட்ட திட்டமிடல் பிரிவு உதவி அரசங்க அதிபர் பிரிவுகள் தோறும் நடத்திவரும் மகளிர் சுயதொழில் பயிற்சிநெறி இப் மாத இறுதியில் புங்குடுதீவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

புங்குடுதீவு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இத்தொழிற் பயிற்சிக்கு புங்குடுதீவு, நயினுதீவு ஆகிய பகுதிகளிலிருந்து 65 பெண்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக புங்குடுதீவு விசேடசேவை அலுவலர் திரு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

## பொதுச் செயலாளர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் விசேட சேவை அலுவலகத்தின் பொதுச் செயலாளராக திரு ரி கதிர்காமநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பொன் விழா

(யாழ்ப்பாணம)

கொழும்புத்துறை மத்தி ஐக்கிய நாணய சங்கத்தின் பொன் விழா திரு.செ.துரைராஜசிங்கம் தலைமையில் இம் மாதம் 27ம்திகதி சனிக்கிழமை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராகயாழ். மேல்நீதி மன்றநீதிபதிதிரு.ஜே ஜி ஆசீர்வாதம் கலந்து கொள்ளவுள்ளார். மற்றும் விசேஷ அழைப்பினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான எம்.சி. எம். இக்பாலும் ஆர்.ஜெகநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நாடகம்

[கொழும்புத்துறை]

யாழ் கல்வித் திணைக்களம் நடாத்திய யாழ்ப்பாணம்,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கிடையிலான நாடகப் போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்களின் ''நரகத்தில் இடர்ப்படோம்'' என்னும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களின் வீர மரணம் என்னும் நாடகம் இரண்டாவதாகத் தெரிவு செய்யப் பட்டது.

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

உலக சுற்றுடல் தினத்தை முன்னிட்டு ''தாவரங்களும் சுற்றுடலும்'' என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு ஒன்று சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய மண்டபத்தில் அடுத்த மாதம் மூன்றும் திகதி நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு.க.சண்முகநாதன் தலைமையில் நடைறெபவுள்ள இக் கருத்தரங்கில்யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் இதற்கான ஒழுங்குகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

## கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம்

(கரவெட்டி)

கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கியின் மூலம் தமது இம்மாத ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 500 பேர் இதில் வைப்பாளர்களாகச் சேர்ந்துள்ளனர்.

இக் கிராமிய வங்கியின் மூலம் கடந்த மாதம் 119 பேர் ஓய்வூதியம் பெற்றனர்.

கடந்த மே மாதத்திலிருந்தே இவ்வங்கியில் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆற்றெணுப் பிரிவு



நல்லவர்கள் பலநாட்கள் வாழ்வதில்லை என்பதனுல் தான் என்னவோ நல்லவர்களை வெகுவிரைவிலே இறைவன் தன்னுடன் அழைத்துக் கொள்கிறுன.

ஆம், நல்ல மனம்கொண்ட கைதடியைச் சேர்ந்த சி. ஜெயந்திரனின் அகால மறைவு இதனையே காட்டுகின்றது.

எல்லோருடனும் பண்பாகப் பழகும் இதயமும்,எவருக்கும் உதவி செய்யும் உழப்பாங்கும் கொண்ட ஜெயந்திரன் எம்மைவிட்டு பிரிந்து நாற்பத்தைந்து நாட்கள் கடந்துவிட்டன. அவர் எம்மோடு பழகிய நாட்கள் இன்னும் மனத்திரையில் தெரிகின்றன. எப்பொழுதும் சுறுசுறுப்புடன் காணப்படும் இவர் எடுத்தகருமத்தை முடிக்கும் திறமையுடையவராய் விளங்கினுர்.

தன்னுடன் பழகும் எவரையும் தன்வசமாக்கும் வசீகரம் படைத்த ஜெயந்திரனின் மறைவு அவரோடு பழகியவர்களுக்கு கைகளில் ஒன்று இல்லாத நிலையை உண்டுபண்ணி விட்டது.

நண்பன் ஜெயந்திரனின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. எமக்கு மாத்திரமல்ல நல்ல உளம் படைத்த எவருக்குமே இவரது இழப்பு பேரிழப்பாகத்தானிருக்கும்.

மிகக் குறுகிய வயதில் எம்மைப் பிரிந்த அன்புத்தோழன் ஜெயந்திரனின் ஆத்மா சாந்தியடைவதாக.

என். கே. துரைசிங்கம்

## சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்தால்....

# லலித் எச்சரிக்கை!

(கொழும்பு)

''ஜனதிபதி தேர்தலில் தாம் வெற்றியடைந்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அறிவித்திருந்தது. இதன் அர்த்தம் யாதெனில் தற்போது விசாரணையிலுள்ள நூற்றுக்கும் அதிகமான பயங்கரவாதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதாகும்,'

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி குண்டசாலையிள்ள சிறீமல்வத்த என்ற இடத்தில் ஐ தே கட்சி வேட்பாளர் திரு ஆர். பி. விஜேசிறியை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

அமைச்சர் அத்துலத்முதலி அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!-

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குவாக்களித்து, தற்போது விசாரணையிலுள்ள பயங்கரவாதிகளை விடுதலை செய்ய விரும்புகிறீர்களா என்று வாக்காளர்களாகிய உங்களைக் கேட்கவிருப்புகிறேன்

''வடக்கிலும் தமிழ்நாட்டிலுமுள்ள பயங்கரவாதிகள் குண்டசாலை, மின்னேரியா இடைத்தேர்தல் முடிவுகளை உற்றுநோக்கி வருகிறுர்கள். இதன் மூலம் இவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக நடத்தும் போராட்டத்தில், மக்கள் அரசாங்கத்திற்கு சார்பாக உள்ளார்களா என்பதை அறியவுள்ளனர்.

''இத்தேர்தல் முடிவுகள் அரசாங்கத்திற்குச் சார்பாக அமையாவிட்டால் ஈழம் வாதிகளும், பயங்கரவாதிகளும் அப்பாவி மக்களை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். ''சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பவர்கள்,பயங்கரவாதிகளை விடுதலை செய்வதற்கு மட்டுமன்றி, புதியதொரு பயங்கரவாதத்தை இந்த நாட்டில் கட்டவிழ்த்து விடுவதற்கும் உதவுகிறுர்கள்'' என்றுர்.


அனைவருக்கும் இனிய

★ தீபாவளி நல் வாழ்த்துக்கள் ★

கொழும்பு மாநகரில், தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள

MERCANTILE TOURS (CEYLON) LTD.

நிறுவனத்தார் யாழ்ப்பாண மக்களின் நலன் கருதி,
யாழ்ப்பாணத்திலும் தமது கிளை நிறுவனத்தைத் திறந்து சேவையாற்றுகின்றனர்
உலகின் எப்பாகத்திற்கும் எந்த விமான சேவை மூலமும் மிகக்குறைந்த கட்டணத்தில்
பயணச்சீட்டையும், பயணிகள் காசோலைகளையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

சகல விமான டிக்கட்டுகளின் பிரதம முகவர்கள்
பயணக் காசோலை வழங்குபவர்கள்

- சவூதி அரேபியன் ஏயர் லைன்ஸ் (Saudia)
- டிரான்ஸ் வேர்ல்ட் ஏயர் லைன்ஸ் (Twa)
- மலேசியன் ஏயர் லைன்ஸ் சிஸ்டம் (Mas)
- எத்தியோப்பியன் ஏயர் லைன்ஸ்

★ நொடிப்பொழுதில் சிறந்த சேவை ★

MERCS
MERCANTILE TOURS
(CEYLON) LIMITED
No. 11/8, Stanley Road.
Jaffna. PHONE 22321

மேர்க்கன்டைல்
ட்ருவர்ஸ் (சிலோன்) லிமிட்.
மே/பா மேர்கன்டைல் கிறெடிட் லிமிட்.
11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 021 — 22321

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
நிச்சய தாம்பூலம்
தினசரி 3 காட்சிகள்

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
ரஜனிகாந்த், நாகேஷ்,
சுருளிராஜன் நடித்த
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
கமலஹாசன்— அம்பிகா
நடித்த
சகலகலா
வல்லவன்
(கலர்)

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவகுமார்—ராதா
சிவச்சந்திரன்
ஆனந்த ராகம்
(புதிய பிரதி-
ஈஸ்மன்கலர்)

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 21-10-84
Sean Connery, Michael Caine, Edward fox
A BRIDGE
TOO FAR
(war film)
பலகோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட மிக நவீன ஆயுதங்களைக் கையாளும் யுத்தப்படம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
இன்று மட்டும்
றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
VISITING HOURS
24-ந் திகதி முதல்
Fred Williamson
Blind Rage
தீரமிக்க குருடர்களின் திட்டமிடப்பட்ட வங்கிக் கொள்ளை- திடுக்கிட வைக்கும் கராட்டி சண்டைகள்

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
லிடோ சினிமா
Daily 4 Shows
CANAN THE
BARBARION

வெலிங்டன்!
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
மோகன் - பூர்ணிமா
பயணங்கள்
முடிவதில்லை
[ஈஸ்மன்கலர் - புதியபிரதி]

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
ஹரன் (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES
AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குங்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
வின்ஸர் [யாழ்.]
22-10-84 வரை
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - விஜயா
ஒரே வானம் ஒரேபூமி
(புதிய பிரதி)
விரைவில்
ரஜனி - ராதா
சிவப்பு சூரியன்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

யாழ். பஸ்நிலையத்தில் இயங்கும் விளம்பர சேவை.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ். பஸ் நிலையத்தில் இயங்கிவரும் விளம்பர சேவையினை நடாத்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இச் சேவையினை பொறுப்பேற்று நடாத்த விரும்புபவர்கள் மேலதிக விபரங்களுக்கு-

க. தனபாலசிங்கம்,
பொதுசனத் தொடர்பு அதிகாரி,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை,
பலாலி றோட், கோண்டாவில்,

என்ற முகவரிக்கு 29-10-1984ந் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

சி. கனகரத்தினம்
தலைவர்/ தகவுடை அதிகாரி.
வட பிராந்திய போக்குவரத்துச் சபை.
பலாலி றோட்,
கோண்டாவில்.
349

நற்செய்தி

இவ்வாண்டு சித்திரை மாதத்திலிருந்து ஐப்பசி 10ந் திகதி வரைக்கும் எங்களிடம்

கைவாள் - 30 அங்குலம் – சக்கரமார்க்
HANDSAW - 30 INCHES - WHEEL MARK

வாங்கிய வாடிக்கையாளருக்கொரு நற்செய்தி-

எங்களிடம் மேற்கூறப்பட்ட கைவாள் வாங்கப்பட்டதற்கான அத்தாட்சியாகப் பற்றுச்சீட்டை நேரில் கொண்டுவருபவருக்கு Credit note (கழிவு) ஒன்று கொடுக்கப்படும். இக்கழிவை உபயோகித்து வாடிக்கையாளர்கள் எங்களிடம் வேறு பொருட்களை வாங்க வேண்டும்.

ஸ்ரீ துர்க்கா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23178
354

உடன் விற்பனைக்கு

வாகனங்கள்:

8 Sri Morris Oxford Standared Engine Original Seat with Fan air Cooler Radio Sun shade etc for immediate Sale. மற்றும் 9 Sri Morris marina, Valks vagon 1300, Peuggeot 404, Morris oxford, Valks vagon 1200 Ford escot Datsun Sunny, Toyoto Corolle, 1300 9 Sri Valks vagon in topping Condition. 85 Sri Bajaj Brandnew Scooter, 9 Sri Ford Cortina, 9 Sri Peuggeot 304.

காணிகள்

கொழும்புத்துறை சுண்டிக்குளி வீதியில் வீட்டுடன் 2½ பரப்பு காணி, கொழும்புத்துறை துண்டி வீதியில் 3 பரப்புக் காணி, சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணி, பரந்தன் 7-ம் வாய்க்காலில் 8 ஏக்கர் காணி (இருபோகம் செய்யக்கூடிய நெற்காணி), சாவகச்சேரியில் நகரசபை எல்லைக்குள் வீடு கட்டுவதற்குகந்த பல காணிகள், காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட 4 பரப்புக் காணி நிலமட்ட வீட்டுடன் உள்ளது, மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் வீட்டுடன் 8 பரப்புக் காணியும், 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்

குயிக்ஸ் என்ரபிறைசஸ்,
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மர்மமனிதரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தின்போது இரத்தினசபாபதி பரிபூரணன் [25 வயது] எனும் இளைஞர் பலியானார்.

இவரது சேட்பையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தின் பின்புறத்தில் இரத்தினசபாபதி பரிபூரணன் என்றும் இவர் பொறியியலாளர் என்றும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர் என்றும் எழுதப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பத்து இடங்களில் நடந்துள்ளன.

பேலியகொடையில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் ஒரு பார்சலைக் கண்டெடுத்த இருவர் அதனைப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டுசென்று பிரித்த போது, பார்சலிலிருந்த குண்டு வெடித்து அவ்விருவரும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள்.

இவர்களுடன் மொத்தம் மூவர் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

### குண்டு வெடித்த இடங்கள்

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக மூன்று குண்டுகள். கொட்டாஞ்சேனையில் ஒரு குண்டு. பேலியகொடையில் ஒருகுண்டு. புறக்கோட்டைச் சந்தைக்கு அருகில் ஒரு குண்டு. மருதானை டவர் நிலையம் அருகில் ஒரு குண்டு அல்பேர்ட் கிரசன்ட் அருகில் ஒரு குண்டு. கினஸிவத்தி அருகில் ஒரு குண்டு. சவுண்டர்ஸ் பிளேஸில் ஒரு குண்டு. சில குண்டுகள் ஆயுதப்படையினரால் வெடிக்க வைக்கப்பட்டன.

### கோட்டை ரயில் நிலையம்

கோட்டை ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றை பொலிஸார் நேரத்துடன் கண்டெடுத்து செயல் இழக்கச் செய்தனர். அதே சமயம் கோட்டைரயில் நிலையத்துக்கு முன்னுள்ள தனியார் பஸ்நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் பலர் காயமுற்றனர் சேதமும் ஏற்பட்டுள்ளது.

### பான்ஸ் பிளேஸில்

பான்ஸ்பிளேசில் குண்டு ஒன்று வெடித்தது. அமைச்சர் சிறில் மத்தியூவின் செயலாளர் வீட்டில் இந்தக்குண்டு வெடித்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சுதந்திரச்சதுக்கம் லயனல் வென்ட் தியேட்டர் ஆகிய இடங்களிலும் குண்டுகள் வெடித்துள்ளன ஆனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தகவல் கொடுப்போருக்கு ரூபா 2 லட்சம் வழங்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார்.

## இன்ரசிற்றியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரத்தில் ஒருமணி நேரமும், வவனியாவில் ஒரு மணிநேரமும் சோதனை நடைபெற்றதாக ரயில்வே பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன

நண்பகல் 1-45 மணிக்கு யாழ்ப்பாணம்வந்த ரயில் 2-25 மணிக்கு புறப்பட்டுச் சென்றது.

வழக்கமாக இன்ரசிற்றி ரயில் வவனியவில் தரித்துச்செல்வதில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது.

இச்சோதனையின் போது சில இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிகிறது.

### வவனியாவில் இருவர் கைது

வவனியா புகையிரத நிலையத்தில் வைத்து ஆயுதப்படையினர் 'இன்ரசிற்றி' ரயிலில் சோதனைமேற்கொண்டபோது நடுத்தர வயதுடைய இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் யாழ். நகரில் மோட்டார், கார் உதிரிப்பாக விற்பனைக்கடையில் வேலை செய்பவராக இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது

அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் ஆயுதப்படையினர் சோதனை இட்டபோது, புகையிரதக் காவலரின் 'பாக்'குகளைக்கூட திறந்து சோதனை செய்தார்களாம். (மா)

## வல்வையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் வல்வெட்டித்துறை மாவட்டசபை உப அலுவலகத்தின்கீழ் இயங்கும் மின்சாரப்பகுதியில் கடமையாற்றும் மின்சாரத் தொழிலாளி ஒருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபருக்கு முறையிடப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக இராணுவ அதிகாரியுடன், யாழ் அரச அதிபர் தொடர்புகொண்டு அவரின் நிலைமையை விளக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## சலுசலாவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மற்றும் துப்பாக்கிகளை காட்டி பயமுறுத்தி கொள்ளையடித்துச் சென்றதாக யாழ் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

இனந்தெரியாத அக்கோஷ்டியினர், அங்கு இருந்த ஊழியர்களைப் பயமுறுத்தி துணிவகைவாங்க வந்திருந்த பொது மக்களில் சிலரின் உதவியுடன் துணிவகைகளை லொறியில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டனராம். (மா)


அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்
திருக்கேதீச்சரத்தில்
துவஷ்டா மணிமண்டபம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் திருக்கேதீச்சரத்தில் ஆதியில் ஆலயம் அமைத்த துவஷ்டா மன்னரின் ஞாபகார்த்தமாக பல இலட்ச ரூபா செலவில் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இம் மண்டப அமைப்புக்கான நிதியை அகில இலங்கையிலுமுள்ள விஸ்வகர்மகுல மக்களிடமிருந்து மேற்படி சங்கம் எதிர்பார்க்கின்றது. எனவே மேற்படி மண்டப நிதிக்கு தங்களாலியன்ற நிதி உதவியை சங் ப் பொருளாளர்.

செ. நடராசா, 302, கே கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்

அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் மேற்படி விலாசத்தில் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி, தலைவர்.
த. பரராசசிங்கம், செயலாளர்.
241

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# பெறுமதிவாய்ந்த மருந்துகள் திருட்டு!

(மட்டுவில்)

சாவகச்சேரி அரசினர் ஆஸ் பத்திரி களஞ்சிய அறையிலி ருந்து சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் திருடப்பட்டுள்ளன!

இரவோடு இரவாக மருந் தறைகூரை பிரிக்கப்பட்டு இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

## வழக்கு தள்ளுபடி

[கொழும்பு]

எஹலியகொட தேர்தல் முடிவை ஆட்சேபித்து திரு வாசுதேவ நாணயக்காரவினால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நேற்று செலவு தொகையுடன்

எதிரி தரப்பில் தெரிவிக்கப் பட்ட ஆட்சேபங்கள் சரியா னவை என ஏற்றுக்கொண்டு நீதிபதி இத்தீர்ப்பை வழங்கி னர்,

## இப்படியும் நடக்கிறது

யாழ் நகரில் ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால்.... தொண்ணூறு மைலுக்கு அப்பாலுள்ள வவுனியா நகரம் வெறிச்சோடி விடுகின்றது!

மக்கள் நேரகாலத்துக்கு வீடு சென்று விடுகின்றனர். அது மட்டுமல்ல; வியாபார நிலையங்கள் கூடவேளைக்கே மூடப் படுகின்றன!

இதில் பெரிய விஷயம் என்னவென்றால் யாழ். நகரில் ஒரு சம்பவம் நடந்தால் அடுத்த நிமிடமே அச் செய்தி வவுனியா நகருக்குப் பறந்துவிடுகிறது!

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த வெளி நாட்டுநிருபர் ஒருவர் தொலைபேசியில் எம்முடன்தொடர்பு கொண்டு கேட்டார்:

''நகரில் மக்கள் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஏதும் திருவிழாவா?''

— 'ஊடுருவி'

## பொலிஸாரைக்கொலைசெய்ய முயற்சி நடந்ததாம்

[திருகோணமலை]

உப்புவெளி பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரியையும் வேறு பொலிஸ் கான்ஸ்டபிள் களையும் கொலைசெய்வதற்கு எடுக்கப்பட்டமுயற்சிமுறியடிக் கப்பட்டுள்ளது

நிலாவெளியில்கைதுசெய்யப் பட்ட ஒருவரைப் பொலிசார் விசாரணைக்குட்படுத்தியதை யடுத்து மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்க ளிடமிருந்தே மேற்படி தகவல் தெரியவந்ததாகவும் பொலிஸ் நிலைய வட்டாரங்களில் கூறப் படுகின்றது.

பொலிஸ் பொறுப்பதிகாரி யையும் மற்றவர்களையும் கொன்றுவிட்டு வங்கியொன் றைக் கொள்ளையடிக்க இவர் கள் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

## வண. சிங்கராயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டு பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

வண பிதா சிங்கராயர் வண சின்னராசா ஆகியோரை எதிரியாகக் கொண்ட வழக்கு நவம்பர் 12-ம் திகதிக்கும், வண பிதா சிங்கராயர், நித்தி யானந்தன், திருமதி நித்தியா னந்தன் உட்பட ஐவரை எதி ரியாகக் கொண்ட வழக்கு 1985-ம் ஆண்டு ஜனவரி 15-ம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட் டது.

## முல்லைத்தீவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு நடவடிக்கைகள் பலப் படுத்தப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்ப, ஒ ட் டுசுட்டான், நாயாறு ஆகிய பகுதிகளில் கடும் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

முல்லைத்தீவில் நேற்று சில பாடசாலைகளில் மாணவர்கள் வரவு குறைவாக இருந்தது. வீதிகளில் மக்கள் நடமாட்ட மும் குறைந்திருந்தது. [க]

கொள்ளைகளை எதிர்த்து

# யூனியன் கல்லூரி மாணவர் மறியல்!

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்வகுப்பு மாண வர்கள் நேற்றுக்காலை 8-30 மணியிலிருந்து 11-30 மணி வரை கல்லூரிக்கு வெளியில் மறியல் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

கல்லூரியின் ஆய்வுகூடத் தில் பத்துமுறைகள் அடுத் தடுத்து நடத்தப்பட்டுள்ள கொள்ளைகளை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இம்மாதிரி கொள்ளை கள் நடப்பதால் தமது கல்வி பாதிக்கப்படுகின்றது என்றும் ஆய்வுப் பயிற்சிகளைச் செய்ய முடியாமலிருக்கிறது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுலோக அட்டைகளுடன் மாணவர்கள் நடத்திய இவ் வார்ப்பாட்டம் இன்றும் தொடரலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக

## மருத்துவபீட 2-ம் ஆண்டு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழ கத்தின் மருத்துவப்பட்ட இரண்டாம் வருடப் பரீட்சை முடிவுகள்:

(முதல், இரண்டாம் வகுப் பில் எவரும் சித்தியடைய வில்லை) சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

செல்வி ஏ. ஜே. ஸ்டீபன், ஏ. அப்துல் ஹாஜி, வி. ரவி குமார், செல்வி பி. சுவர்ண லதா, எஸ். ஜே ரவீந்திரன் கே. ஆனந்தன், பி. அருட்பி ரகாசம், செல்வி எம். அருணா சலம், செல்வி எஸ். பாலசுப் பிரமணியம், செல்வி ரி. பால சுப்பிரமணியம். செல்வி என். குணரத்தினம், செல்வி ஹிம சலா குமாரி, ஏ. எம் ஜவார், ஜே எச். எஸ். ஜெயரஞ்சன் செல்வி சி. கந்தையா, செல்வி எம். காசிநாதர், கே. கதிர் காமதாஸ், செல்வி கே. மைதிலி, செல்வி கே. நட ராசா, செல்வி பி. நாகலிங் கம். எஸ். நிமிலன், எ ம், எம். நௌஷாத், எஸ் பிரபா கரன், எஸ். ஏ. புவிநாதன், கே. ராஜாராம், எஸ். சந்திர கே. செந்தில்குமரன், எஸ். ஐ செஸ்காமினி, செல்வி பி. சண்முகராசா, ஐ. எல். சித்திக், செல்வி ஏ சிதம்ப ரப்பிள்ளை, எஸ். சுதுகுமார், செல்வி கே. தவராசன், செல்வி ஆர். வடிவேலு, கே, விக்னேஸ்வரன். எம். விஜய குமார், கே. யோகசாந்தி.

**நூணசித்தி**

எஸ் அன்புதாசன், கே. அற்புதராஜா, எஸ். சந்திர பாலன், ஏ. ஜசடீன், செல்வி வி. சாவித்திரி, ஜே. சிவம ஞேசரன்-

**மீண்டும் நூணசித்தி**

எம். தமிழ்த சன்.

# இளம் பெண் குத்திக் கொலை!

(கிளிநொச்சி)

முரசுமோட்டையில் 18 வய துள்ள இளம்பெண், அவரது வீட்டில் வைத்து தலையில் கத்தியால் குத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார்!

சுந்தரம் நிதி என்பவரே கொலைசெய்யப்பட்டவரா வார்.

தாயார் குளிக்கச் சென்ற போது இறந்தவர் தனியே வீட்டில் இருந்ததாகத் தெரி விக்கப்பட்டது இதுசம்பந்த மாக பொலிசார் ஸ்தலத் துக்கு சென்று விசாரணை நடத்தினார்கள்.

## காரில் வந்தவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மாலை காரில் இவர் குடும்பத்துடன் சென்று கொண்டிருந்த போது முன் னால் வந்த கார் ஒன்று நடு ரோட்டில் நிறுத்தப்பட்டதாக வும் அக்காரில் வந்த நான்கு வாலிபர்கள் வந்து செல்வரத் தினத்தின் காரில் நான்கு கத வுகளாலும் ஏறிக்கொண்ட தாகவும் நான்கு இளைஞர் களும்; விலை உயர்ந்த உடை களும், சங்கிலி, மோதிரம், பெறுமதிமிக்க கைக்கடிகாரங் கள் அணிந்திருந்ததுடன், நறு மணம் வீசும், 'சென்ற்' வாச னையுடன் தோன்றியதாகவும் கூறப்படுகிறது.

''சத்தம் போட்டால் கொன்றுவிடுவோம்'' என்று பயமுறுத்திவிட்டு அவர்களில் ஒருவர் காரை ஓட்டிச் சென்ற தாகவும், சுமார் அரை மணித் தியாலத்தின் பின் சுடுகாட் டிற்குச் சென்று அவர்களை இறக்கி நகைகளை தருமாறு கேட்டார்களாம். அதனைத் தொடர்ந்து நகைகள்கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன

அத்திபாரம் வெட்டியபோது....

## பழமைவாய்ந்த அம்பாள்சிலை கண்டுபிடிப்பு

(மட்டுவில்)

வீட்டுக்கு அத்திபாரம் வெட் டியபோது வெட்டிய கிடங் கில் அம்பாள் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இதுசுமார் மூவாயிரமாண் டுக்கு முந்தியதெனக் கருதப் படுகிறது.

சாவகச்சேரியில் நடை பெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

திரு. நாகராஜா என்பவர் புதிய வீட்டுக்கு அத்திவாரம் வெட்டினர். வெட்டும் பொழுது சுமார் 4 அடி உயர முள்ள அம்பாள் கற்சிலை ஒன்று காணப்பட்டது இச் சிலை அதிகம்பழுதடையவில்லை.

டச்சுக்காரர்கள் சாவகச் சேரி வாரிவனேஸ்வரர் சிவன் ஆலயத்தை உடைத்த பொழுது இச்சிலை புதையுண்டி ருக்கலாம் என்று நம்பப் படுகி றது.

## யாழ் கல்வி திணைக்களத்தில் கொள்ளைமுயற்சி!

(கல்வியங்காடு)

யாழ். கல்வித்திணைக்களத் தில் துப்பாக்கி நபர்களின் கொள்ளை முயற்சி தோல்வி யடைந்துள்ளது

யாழ். கல்வித்திணைக்களத் தில் நேற்றுப்பிற்பகல் 3-30 மணியளவில் துப்பாக்கி களுடன் நுழைந்த இரு இனந் தெரியாதநபர்கள், திணைக் களத்தில் கணக்காளர் கிளை யினுள் பிரவேசித்து துப்பாக்கி களைக்காட்டி அக்கிளையில் கடமைபுரிந்த ஊழியர்களை கையை உயர்த்தி நிற்கும்படி உத்தரவிட்டனராம்.

ஊழியர்கள் கைகளை உயர்த்தியபடி நின்றதும் ''கணக்காளர் எங்கே?' என்று கேட்டதும் கணக்காளர் அவ் விடத்தில் இருக்கவில்லை என்று கூறவே கணக்காளருக்கு அடுத்த உதவியாளரிடம் சென்று இரும்புப்பெட்டி திறப்பைக்கேட்டனராம் திறப்புக்குரியவர்கள் அங்கு இல்லை என்பது தெரிந்ததும் வாலிபர்கள் ஏமாற்றத்துடன் திருப்பிச் சென்று விட்டனர் சைக்கிள் வண்டிகளிலேயே மேற்படி நபர்கள்வந்தனராம்.

## எம். ஜி. ஆர்.

1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்

நேற்றுமுன்தினம் இரவு முதல்வருக்கு இரத்த சுத்தி கரிப்பு சிகிச்சை அளிக்கப் பட்டதாகவும் அவரது நடித் துடிப்பு, இரத்த அழுத்தம், இருதய இயக்கம் என்பன நல்லநிலையில் இருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

முதலமைச்சருக்கு நரம் பியல் சம்பந்தமாக சிகிச்சை யளித்த இரு ஜபபானிய டாக்டர்கள் அளிக்கப்பட வேண்டிய சிகிச்சைமுறைகள் பற்றி விபரமாக தெரிவித்த பின்னர் நேற்று ஜப்பானுக் குத் திரும்பினர்.

## முல்லைத்தீவு பிரஜைகள்குழு கடற்றொழில் அமைச்சரை சந்திக்கும்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு 1000 வீடுகளை அமைப்பது தொடர்பாக முல்லைத்தீவு பிரஜைகள் குழுவினர் கடற் றொழில் அமைச்சரை சந்திக்க விருக்கின்றனர்.

முல்லைத்தீவு பிரஜைகள் குழு கூட்டம் நேற்று குழுத் தலைவர் டாக்டர் குணரத் தினம் தலைமையில் நடை பெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

வீடமைப்புத் திட்டத்தை பரவலாக அமைக்கும்படி குழு வினர் அமைச்சரிடம் கோர விருக்கிறார்கள். இத் திட் டத்தை மீண்டும் பரிசீலனை செய்யுமாறும் கோருவார்கள்

இதுபற்றி நேற்று முல்லைத் தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனையும் சந் தித்து தங்கள் முடிவை தெரி வித்தனர். (க)

## இன்று நடக்கும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி மக்கள் இன்று நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்றலில எம் ஜி ஆர். சுகமடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து ஒருநாள் உண்ணாவிரதம் இருக்கின்றனர். சமாதான நீதவான் திரு கா செல்வ ராசா தலைமையில் உண்ணா விரதம் நடக்கும்.

## கந்தஷஷ்டி

[யாழ்ப்பாணம்]

வண்ணை அருள்மிகு ஸ்ரீசெந் தில் கதிர்வேலாயுதசுவாமி கோவில் கந்தஷஷ்டி திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்ப மாகும். வியாழக்கிழமை முதல் கந்த ஷஷ்டி விரதம் அனுஷ் டிக்கப்படும். தினமும் காலை ஸ்நபனபிஷேகமும் விசேஷ பஜனையும் திருச்செந்தூர் புராண படனமும் நடை பெறும். மாலை 4 45 மணிக்கு சந்தனக் காப்புச்சாத் தப்பெற்ற செந்தில் முருக னுக்கு நியாசபூர்வ ஷண் முகார்ச்சனையும் வசந்தமண் டப பூஜையும் திருவிழாவும் நடைபெறும்:

## எம். ஜி. ஆருக்கு திருப்பலிப்பூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிறீன்கிங்ஸ் விளையாட்டுக் கழகம், தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் குணமடைய வேண்டுமென் பதற்காக இன்று காலை. யாழ் மேற்றிராசனக் கோவி லில் திருப்பலிப்பூசை ஒன்றை ஒப்புக்கொடுக்கின்றனர்.

1-வது டெஸ்ட்

## வெற்றி-தோல்வி இல்லை!

(லாகூர்)

இந்திய-பாகிஸ்தான் அணி களுக்கிடையே லாகூரில் நடை பெற்ற 1-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இந்திய வீரர்களின் திறமையான துடுப் பாட்டத்தினால் வெற்றி- தோல்வியின்றி முடிவடைந் தது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.